Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 10 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 25 (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 205




# தமிழ்ச்செல்வனைச் சந்திக்காமல் திரும்பினார் உல்ப் ஹென்றிக்சன்!

## தீவிரமடைகிறது நெருக்கடி

கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகளின் பயண ஒழுங்கு தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டம் எதையும் கொண்டுவராததால் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் - விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கமுடியாமல் கொழும்பு திரும்ப நேரிட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சிக்குச் சென்றடைந்த உல்ப் ஹென்றிக்சன் - விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவனைச் சந்தித்துப் பேசினார். நேற்று இவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹென்றிக்சன், நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் ஆகியோருடனான சந்திப்புக்களில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப கிழக்குத் தளபதிகளின் கிளிநொச்சிப் பயணத்துக்கு விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எதனையும் கொண்டுவராத காரணத்தால் இந்தச் சந்திப்பு நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு கிளைமோர்கள்; 3 படையினர் பலி!


வவுனியா —

வவுனியாவில் நேற்றுக் காலையும், மாலையும் நடத்தப்பட்ட இரண்டு கிளைமோர் தாக்குதல்களில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

தேவபுரத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் படுகொலை சீனன்குடாவில் சம்பவம்!



திருகோணமலை —

திருகோணமலை - சீனன்குடாவில் தமிழ்ப் பெண் ஒருவர் ஆயுதபாணிகளால் படுகொலை செய்யப்பட்டதுடன் - அவரது கணவரும் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கந்தசாமி நல்லம்மா (வயது 49) என்ற பெண்ணே உயிரிழந்தார். அவரது கணவர் பசுபதிப்பிள்ளை கந்தசாமி (வயது 50) படுகாயமடைந்தார்.

சமன்புர மற்றும் தனியகமவுக்கு இடைப்பட்ட தமிழர் மீள்குடியேற்றப் பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோச் சாரதிகள் இருவர் நெல்லியடியில் சுட்டுக் கொலை!

நெல்லியடி —

நெல்லியடி நகர்ப்பகுதியில் இரு ஓட்டோ சாரதிகள் இனந்தெரியா நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் நெல்லியடி நகரிலுள்ள பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - கரவெட்டி இராஜகிராமத்தைச் சேரந்த இரு பிள்ளைகளின் தந்தையான கண்ணன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் வசீகரன் (வயது 28), அதேஇடத்தைச் சேர்ந்த இரத்தினம் ஜெசிகரன் (வயது 23) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஓட்டோ தரிப்பிடத்தில் ஓட்டோவை நிறுத்தி விட்டு நின்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர்கள் இருவர் மீதும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மந்திகை ஆதாரவைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



## காரைநகரில் சுடப்பட்டவர் நேற்று அதிகாலை மரணம்

## தமிழ் இளைஞனின் சடலம் திருகோணமலையில் மீட்பு!





## நேற்று அதிகாலை மரணம்

யாழ்ப்பாணம் —

காரைநகரில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

கனகரட்ணம் வில்வராசா (வயது 37) என்ற குடும்பஸ்தரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவந்தவராவார்.

காரைநகரில் கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் மேற்படி குடும்பஸ்தர் தனது வீட்டின் வெளிக்கதவைப் பூட்டுவதற்காக வந்த போது வீட்டுக்கு வெளியே பதுங்கியிருந்த இனந் தெரியாத ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதன்போது அவர் 9 துப்பாக்கி ரவைகள் உடலில் பாய்ந்து படுகாயடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் மீட்பு!

திருகோணமலை —

திருகோணமலை - பாரதிபுரம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் மகிந்தபுரவுக்கு அருகாமையில் உள்ள பாரதிபுரத்தில் நேற்றுக் காலை 6 மணிக்கு ரோந்தில் ஈடுபட் டிருந்த உப்புவெளி பொலிஸார் இந் தச் சடலத்தை கண்டனர்.

உடனடியாக அந்தச் சடலத்தை திருகோணமலை மருத்துவ சாலைக்கு கொண்டு சென்றனர்.

கன்னியாவைச் சேர்ந்த பாக்கிய ராசா - பாஸ்கரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் என அவரது தாயார் அடையாளம் காண்பித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## வெலிக்கந்த கிளைமோரில் இராணுவ மேஜர் பலி!

பொலனறுவ —

பொலனறுவ - வெலிக்கந்த பகுதியில் இராணுவத்தினரின் டபிள்கப் வாகனம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 6 படையினர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வெலிக்கந்த - சிங்கபுர என்ற இடத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் கிளைமோருக்கு இரண்டு பொதுமக்கள் பலி!

மன்னார் —

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தக் கிளைமோர் தாக்குதல் நடைபெற்றது.

பருப்புக்கடந்தான் - மடுக்கோவில் வீதியில் சின்னவில்லுக்கும், பெரிய வில்லுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியிலேயே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் பெரிய பண்டி விரிச்சானிலிருந்து ஆண்டான்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கட்டடத் தொழிலாளிகள் மீதே நடத்தப்பட்டது.

ஆண்டான்குளம் பாடசாலையில் நடைபெறும் கட்டட வேலைகளுக்குச் சென்றபோதே மரத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதில் சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் தம்பையா குணநாயகம் (வயது 22), லோகநாதன் சந்திரப்பெருமாள் (வயது 21) ஆகிய இருவருமே கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியை தமிழீழ காவல்துறையினரும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்றிரவு வர்த்தகர் சுட்டுக் கொலை!

வவுனியா —

வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்களால் வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று இரவு 7.55 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சற்குணராசா இராஜரத்தினம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எம்து சேவைகள் 1. ஈ.சீ.ஜி 2. அவசர முதலுதவி சிகிச்சைப் பிரிவு 3. வாட் 4. போக்குவரத்துச் சேவை [நோயாளிகளுக்கு]
(C/4385)
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை


# கொலை வெறிக்கு இரையாகாது வன்னியை நோக்கி நகருங்கள்

## தீவக மக்கள் நலன் காப்பகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

இனப்படுகொலைகளைத் தீவிரப்படுத்த யாழ். குடாநாட்டு இராணுவ முகாம்களுக்கு சிங்கள காடையர்கள் வரவழைக்கப்பட்டுள்ள நிலையில்- அவர்களின் கொலை வெறிக்குள் அகப்படாது பாதுகாப்பான பிரதேசமான வன்னிக்கு நகருமாறு தீவக நலன் காப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எம் இனிய உறவுகளே! சற்று சிந்தித்து செயலாற்றுங்கள். இன்று தன்னைப் பற்றியும், தன் இனத்தைப் பற்றியும் ஒவ்வொருவரும் ஆழ உணர்ந்து பார்ப்பது அவசரமானதாகும். இனவெறி கொண்ட சிங்கள அரசும், அதன் ஆயுதப் படைகளும் தமிழீழத்தை அடியோடு அழித்து இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிறுவ கங்கணம் கட்டி நிற்கின்றனர். இதனை எமது இனம் அனுமதிக்க முடியுமா? அவ்வாறாயின் ஏன் மௌனமாக அசை போடுகிறார்கள். விழித்துக் கொள்ளுங்கள்!

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் மிகப்பெரும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது. நாளாந்தம் படுகொலைகள் தொடர்கின்றன. மேலும் இனப்படுகொலைகளை தீவிரப்படுத்த சிங்களப் படைகளின் முகாம்களுக்கு, சிங்கள காடையர்கள் வரவழைக்கப்பட்டு தயார்படுத்தப்படுகின்றார்கள். இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகளை, இதுவரை எங்குமே இடம் பெற்றிராத அவலங்களை நீங்கள் சந்தித்து வருகின்றீர்கள். ஆயினும், உங்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக தெரியவில்லை.

ஒரு இக்கட்டான பயங்கரமான இனப்வெறிப்படைகளின் கரங்களுக்குள் யாழ்ப்பாண குடாநாடு சிக்கியுள்ளது. இதிலிருந்து மீண்டு வாருங்கள்! அதுவே உங்களுக்கு நிம்மதியான வாழ்வைக் கொடுக்கும்.

தமிழன் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள தயாராவதுதான் தற்போதுள்ள ஒரே வழியாகும். யாழ்ப்பாணத்தில் அரசபடைகளின் அட்டகாசம் உச்சம் பெற்றுள்ள நிலையில் -அந்த நிம்மதியற்ற அச்சம் நிறைந்த பயங்கர சூழலுக்குள் சிக்குண்டு உங்கள் பெறுமதியான உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் உயிர் மடிவதை விடுத்து, சுதந்திரமான- விடுவிக்கப்பட்டு தனியரசாக உருப்பெற்றுவரும் வன்னிநோக்கி நகருங்கள். அதுவே, இப்போது சிறந்த வழியாகும். நாம் வன்னியில் இருந்து கொண்டு தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கரங்களை வலுப்படுத்தி யாழ். மண்ணை விரைவில் மீட்டெடுப்போம்.

அரசவன்முறைகள் நிறுத்தப்படும், ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும், இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படும், ஜெனிவாப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என எத்தனை நாட்கள் எம் மக்கள் காத்திருப்பது. காத்திருக்கும் சிங்கள அரசு எதனையும் தரப்போவதில்லை.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிராகரித்து சமாதான நல்லெண்ண சமிக்ஞைகளை தூக்கியெறிந்து மீண்டும் ஒரு போரை முன்னெடுக்க அரசு முயல்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அதன் வெளிப்பாடேதான் இந்த இனப்படுகொலைகள்.

புத்தூர் கிழக்கு அந்திரான் வெளிப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அருகில் 5 அப்பாவி இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் போரை வலிந்திழுப்பது போலவே கருதப்படுகிறது.

எனவே, தமிழர்களுக்கு புதைகுழி வெட்டும் இராணுவம் அதே புதைகுழியில் புதைக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

எனவே அன்பார்ந்த தீவக மக்களே! இனிமேலும் நீங்கள் இங்கிருப்பது உங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவே வன்னி நோக்கி புறப்படுங்கள். உங்கள் பாதுகாப்பை நீங்களே தேடிக்கொள்ள உகந்த இடம் வன்னி. ஆகவே காலந்தாழ்த்தாது புறப்படும் தேவையும் நேரமும் வந்துள்ளது. புறப்பட்டுச் செல்லுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கானை கிராம மக்களுக்கு

சங்கானை—

சங்கானை மேற்கு ஜே/179 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள்,18 வயதுக்கு உட்பட்ட பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெற்றோர் ஆகியோரை நாளை காலை 9 மணிக்கு சங்கானை மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு வருமாறு கிராமஉத்தியோகத்தர் மகிழ்ராஜா தெரிவித்துள்ளார். (47)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்—

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தமிழ் மொழிப்பாட இலவச வழிகாட்டல் கருத்தரங்குஆசிரியர் நாக. தமிழிந்திரனால் நாளையும் எதிர்வரும் 30 ஆம் திகதியும் பிற்பகல் 2 மணி முதல் பிற்பல் 5மணிவரை பீகொண் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

## விசர்நோய் தடுப்பூசி

வடமராட்சி—

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை சுகாதாரப் பணிமனையால் விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இன்று காலை தும்பளைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குதடுப்பூசி ஏற்றப் படும். (12)

# விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு வைபவமும்

நெடுந்தீவு—

ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு வைபவமும் இன்று பி.ப 2 மணிக்கு ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன் தலைமையில் நடைபெறும் போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.றொகான் இராஜசிங்கம், வடபிராந்திய போக்குவரத்து சபை முகாமையாளர் கே. கணேசபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண.பிதா யேசுதாசன் அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இதேவேளை, நிகழ்வின் இடைவேளை நிகழ்வாக உதைபந்தாட்டமும் தொடர்ந்து விருந்தினர்கள் உரையும், பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளன. (113)

# யாழ்,முல்லை மீன்பிடி சமாசங்களுக்கு ஜீ.ரீ.இசற் ஆறு வாகனங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கில் மீன்பிடித்தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்கு. ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவகம் 6 குளிரூட்டி வாகனங்களையும், 6 சிறியவகை வாகனங்களையும் அன்பளிப்புச் செய்யவுள்ளது.

ஜீ.ரீ.இசற்- ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைச்சும்,இலங்கை தேசநிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினதும் சார்பில் வடக்கு- கிழக்கு மீனவர் சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவி புரிந்து வருகிறது.

இந்த பரந்துபட்ட உதவி வழங்கலின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாக 6 குளிரூட்டி வாகனங்களுக்கும், 6 சிறியவகை சுமையூர்தி வாகனங்களுக்கும் ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனமாகிய வேள்ட் விசன் நிதியுதவி வழாங் கியுள்ளது.

இந்த நவீன வசதிகளுடனான வாகனங்கள் யாழ்ப்பாண மீனவர் சங்க சமாசங்களின் சம்மேளனத்துக்கும், முல்லைத்தீவு மீனவர் சங்கங்களின் சமாசத்துக்கும் இன்று பரந்தனில் உள்ள ஜீ.ரீ.இசற் செயற்பாட்டு மையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மீனவர் சங்கங்களின் சமாசத்துக்கு 2 குளிரூட்டி வாகனங்களும், யாழ்ப்பாண மீனவர் சங்க சமாசங்களின் சம்மேளனத்துக்கு 4 குளிரூட்டி வாகனங்களும் வழங்கப்படவுள்ளது.யாழ்ப்பாண மீனவர் சங்க சம்மேளனம் 2 குளிரூட்டி வாகனங்களை யாழ்.மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட மீனவர் சங்கங்களின் சமாசங்களுக்கு வாடகைக்கு வழங்கும். மற்றைய இரண்டும் அந்தப் பிரதேசத்திலுள்ள மீனவ குடும்பங்களுக்கு கொடுக்கப்படும். இதன் மூலம் அவர்கள் மீன்களைத் தெற்கிலுள்ள சந்தைகளுக்கு அனுப்ப முடியும்.

இதுதவிர, மீனவ சங்கங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். மீன்பிடி இடங்களுக்குச் சமீபமாக 4 குளிர்பதன அறைகள் கட்டப்பட்டு அவற்றுக்கு உபகரணங்களுடன் கூடிய காரியாலயம் அமைத்துக் கொடுக்கப்படும். மீனவர்களின் சொந்தப் பங்களிப்புடன் ஒரு சுழற்சிமுறைக் கடன் திட்டம் உருவாக்கப்பட்டு படகுகள், வலைகள் வாங்குவதற்கு வசதிகள் செய்யப்படும். மீன் பிடித் திணைக்களம் சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், வாடிக்கையாளர் சேவை, மீன் கையாளலும், பதனிடலும் பற்றிய தொழிற்பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள் மூலம் வழங்கப்படும். இந்த உதவியால் மீன்பிடி சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் தமது அங்கத்தவர்களுக்கு நல்ல முறையில் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கால்நடைகளை எடுத்துவர அனுமதி வழங்க தீர்மானம்

நெடுந்தீவு—

நெடுந்தீவிலிருந்து கால்நடைகளை வியாபார நோக்கில் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி இந்தமாதம் வழங்கப்படவுள்ளதாக அண்மையில் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அனுமதியின் பிரகாரம் நாம்பன் மாடுகள் 10, ஆட்டுக்கிடாய்கள் 20 ஆகியவற்றை ஒருவர் ஒரு தடவை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் கடந்த பல மாதங்களாக கால்நடை ஏற்றுமதிக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமையால் பாதிக்கப்பட்ட பெருமளவு பயனாளிகள் நன்மையடைவதுடன் அதிக வருமானத்தையும் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (113)

# மணிவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்—

அகவை அறுபதைக் கண்ட உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி யின் முன்னாள் அதிபர் கிருஷ்ணபிள்ளை நடராசாவின் மணிவிழாவும், மலர் வெளியீடும் இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அதிபர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் - சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர், வண.பிதா. வி.என். தர்ம குலசிங்கம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா, கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரி கே.அம்பல வாணர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க. அரியரட்ணம், பழைய மாணவர் சங்கச் செயலாளர் த.யோகசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கனடாக்கிளை பழையமாணவர் சங்கத் தலைவர் கலாநிதி வசந்தகுமார், பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் க.அருணாசலம், உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராசா, பழைய மாணவர் சங்கத் தலைவர் எம்.தங்கராசா ஆகியோர் பாராட்டுரையையும் வழங்கி கௌரவிக்கவுள்ளனர். (12)

# வழமையான நேரத்தில் படகு சேவை

நெடுந்தீவு—

நெடுந்தீவு - குறிக்காட்டுவான் இடையிலான படகு சேவை நேரம் தற்போது மேற்கொள்ளப்பட்ட நேர மாற்றத்தால் எதுவித மாற்றமும் இன்றி வழமை போலவே சேவை நடை பெறுகிறது.

நெடுந்தீவிலிருந்து படகு காலை 7.30 மணிக்கும் பி.ப 2 மணிக்கும் குறிக்காட்டுவானிலிருந்து காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்கும் சேவையில் ஈடுபடும்.

அண்மையில் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த நேர அட்டவணை தொடர்பாக ஆராயப்பட்டு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (113)

# ஜெயந்தி விழா

வடமராட்சி—

தொண்டமனாறு சிவஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் (மௌனகுரு) 101ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 28ம் திகதி தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் விசேட அன்னாபிஷேகம் நடைபெற்று 9.30 மணிக்கு கடவுள் சுவாமிகளின் தகரமட வாசஸ்தலத்தில் விசேட பூசை, பஜனை, பிரார்த்தனை, ஆன்மீக சொற்பொழிவு என்பன நடைபெற்று தொடர்ந்து சந்நிதியான் ஆசிரமத்தில் மகேஸ்வர பூசை நடைபெறும்

# கால்நடை வைத்தியர்களுக்கு ஒருவாரகாலக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்—

ஜெய்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் கால்நடை வைத்தியர்களுக்கு ஒருவார காலக் கருத்தரங்கு நாளை வவுனியா பூந்தோட்டம் அரசினர் கால்நடை வைத்தியசாலையில நடை பெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் பசு பராமரிப்பும், பால் பண்ணை தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்தாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கருத்தரங்கில் பருத்தித்துறை மற்றும் உடுவில் கால்நடை வைத்திய அதிகாரிகள் எஸ் வசீகரன், செல்வி.சி.பி மரியதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலும் கோழிவளர்ப்பு, பால்பண்ணை பசுபராமரிப்பு தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (12)

## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் வீட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு :-0114202623. (2247)


நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், அஷிமா மற்றும் பலர் நடித்த

சுதேசி

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்



புதுவருட வெளியீடு பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்



எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த

கள்வனின் காதலி

கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

திருப்பதி



இரண்டாவது வெற்றி வாரம்


காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

# கருணா குழுவுக்கு பாதுகாப்பு வழங்குவது அரசின் பொறுப்பு!

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு —

ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ள கருணா அணியினருக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில் -

கருணா அணியினர் போன்று ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ள துணை ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்களுக்கும், அவர்களது அலுவலகங்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடப்பாடு அரசாங் கத்துக்கு உண்டு.

இந்தக்குழுவினர் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் வேளைகளில்- அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும் பொறுப்பும் அரசாங்கத்துக்கு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பேச்சுக்களில் ஏற்படும் தடங்கலுக்கு புலிகளே பொறுப்பேற்கவேண்டும்

## என்கிறார் சரத்பொன்சேகா



கொழும்பு —

ஜெனிவாவில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டும். மாறாக மறைமுக யுத்தத்தில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபடுவார்களேயானால், படையினரும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படுமென இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப் புலிகளால் வடக்கு - கிழக்கில் இரத்தக்களரி ஏற்பட்டுள்ளது. இது நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திவருகின்றது. இந்த அத்துமீறல் நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டு, அரசாங்கம் அழைக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டும். பேச்சுவார்த்தையில் பங்குபற்றாமல், மறைமுக யுத்தத்தில் ஈடுபடுவார்களேயானால், படையினரும், இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலையேற்படும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலைகளுடன் இராணுவத்தினர் தொடர்பு படவில்லை. விடுதலைப் புலிகளே இவற்றை மேற்கொண்டு வருகின்றனர். கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள், இராணுவ முகாம் அருகே காணப்பட்டால் அவற்றை இராணுவத்தினரே செய்தாகப் புலிகள், படையினர் மீது குற்றம் சுமத்திவருகின்றனர். யாழ்.குடாநாட்டில் மட்டும் வீதிக்கு வீதி 200 முகாம்கள் உள்ளன.

யுத்தத்துக்கு வருமாறு புலிகளே எம்மை அழைக்கின்றனர். எனினும் இந்த யுத்தத்துக்கு நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏதாவது தடங்கல்கள் ஏற்படுமாக இருந்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் புலிகளே ஏற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழர்கள் மீதான வன்முறைகள் திட்டமிட்ட இனப் படுகொலையே!

## சிங்கள உண்மைஅறியும் குழு தெரிவிப்பு

திருகோணமலை —

திருகோணமலையில் ஏப்ரல் 12 ஆம் திகதி தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலை ஒரு திட்டமிடப்பட்ட சதியே என்று சிங்கள உண்மை அறியும் குழு அறிவித்துள்ளது.

திருமலையில் இடம் பெற்ற இனப் படுகொலையைத் தொடர்ந்து கொழும்பை மையமாகக் கொண்ட இன்போர்ம், சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை, மாற்றுக் கொள்கைளுக்கான மையம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய நான்கு சிங்கள அமைப்புக்களை உள்ளடக்கிய உண்மையறியும் குழுவினர் திருகோணமலையில் ஏப்ரல் 16 திகதி விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் பின் கொழும்பில் வெளியிடப்பட்ட இந்தக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருமலை வன்முறையில் மொத்தம் 20 பேர் கொல்லப்பட்டனர். 30 கடைகள் மற்றும் 100 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

மூவாயிரம் பேர் பாடசாலைகளிலும், வழிபாட்டு இடங்களிலும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

ஏப்ரல் 12 ஆம் திகதி குண்டு வெடிக்க வைக்கப்பட்டு, ஐந்து பேர் கொல்லப்பட்ட உடனேயே 15 நிமிடத்தில் இந்த இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டுள்ளதானது - ஒரு திட்டமிட்ட செயலாகவே கருதுகிறோம்.

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடத்தப்பட்ட இனப்படுகொலையைப் போன்றது திருமலை இனப்படுகொலை. திருமலை நகரின் வர்த்தகப் பகுதியில் ஆயுதமேந்திய சிங்களவர்களால் பழிக்குப் பழி வாங்கும் வகையில் தமிழர் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு, பொருட்கள் சூறையாடப்பட்டமையானது - மிகவும் துன்பகரமானது.

தமிழர் கடைகள் தீக்கிரையாக்கப் பட்டபோதும், படுகொலை செய்யப் பட்ட போதும் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாக நேரில் பார்த்த பலரும் தெரிவித்தனர்.

வன்முறைகளை அரசாங்கத்தால் தடுக்க முயலவில்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் மற்றும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் திருகோணமலை மக்களிடம் கூட்டாக மன்னிப்பு கோருவதுதான் நீண்ட காலத்துக்கு இருதரப்புக்கு இடையே நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வற்வரி மோசடி தொடர்பாக மேலும் இருவர் கைதாகினர்

கொழும்பு —

வருமான வரித் திணைக்களத்தில் வற்வரியை மீளச் செலுத்திய போது நிகழ்ந்த 355 கோடி மோசடியில் தெஹிவளை கோடீஸ்வர வர்த்தகர் பெற்றுக் கொண்ட 22 கோடி 59 லட்சம் ரூபாவை அவரது சாரதியின் பெயரில் நுகேகொடையிலுள்ள தனியார் வங்கியொன்றில் வைப்புச் செய்துள்ளது தெரியவந்துள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்த்தகரும், அவரது சாரதியும் கடந்த 18 ஆம் திகதி இரவு இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். வர்த்தகர் தெஹிவளையிலும், சாரதி கம்பளையிலும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் முஸ்லிம்களாவர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் வெளிநாட்டிலிருந்து காலணிக்களை இறக்குமதி செய்து விற்பவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை - வற்வரி செலுத்தும் பிரிவின் கணினி முறைத் தகவல்கள் சீர்செய்யப்பட்டுள்ளதாக கடந்த 19 ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றில் இரகசிய பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரையும் மே மாதம் 3 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நாமல் பலல்ல உத்தரவிட்டார். (தே)

# புத்த ஜெயந்தி முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்?

கொழும்பு —

மே மாதம் 12, 13, 14 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ள புத்த ஜெயந்தி 2550 ஆம் ஆண்டின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் முடிவடைந்த பின்னர், நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றில் அரசாங்கத்துக்கு நிலவுகின்ற நெருக்கடியான நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து, பெரும்பான்மைப் பலத்தை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் திட்டமாகவுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐ.தே. கட்சியிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணையக்கூடுமெனவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்தா அல்லது தனித்தா போட்டியிடுவது என்பதில் தெளிவான முடிவு இல்லாவிடினும், ஜாதிக ஹெல உறுமய, பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியாக வேட்பாளரை நிறுத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

# புலிகளின் காலடியில் விழுந்து உதவி செய்யத்தேவையில்லை

## ஜே.வி.பி. தெரிவிப்பு



கொழும்பு —

சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகளை அழைக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் - புலிகளின் காலடியில் விழுந்து உதவிகளை வழங்கத் தேவையில்லையென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப் புலிகளுக்குத் தனியார் ஹெலிகொப்டர்களை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை ஜே.வி.பி கடுமையாக எதிர்க்கிறது. எனினும், அரசாங்கம் நேரடியாக ஹெலிகளை வழங்காமல், தனியார் மூலமாக வழங்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் திருப்தி அளிக்கிறது.

இந்தத் தனியார் ஹெலிகளுக்கான அனைத்து செலவுகளையும், நோர்வே ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது. இதன்மூலம் விடுதலைப் புலிகள் தமது இலக்கை அடைவதற்கு நோர்வே எந்த விதத்திலும் உதவிகளை வழங்கவுள்ளது தெளிவாகத் தெரிகிறது. இதனையே நாம் ஆரம்பத்திலிருந்து கூறி வருகிறோம்.

விடுதலைப் புலிகள் சமாதான செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் கலந்து கொள்ளவில்லை. யுத்தம் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடவே கிழக்கு மற்றும் வன்னிக்குப் பணயத்தை மேற்கொள்ளப் புலிகள் - அரசிடம் வசதிகளைக் கோருகின்றனர்.

பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்பதற்காகப் புலிகளுக்கு உயரிய வரப்பிரசாதங்களை வழங்க வேண்டுமென்ற அவசியமில்லை. சர்வதேச சமூகமும் புலிகளின் செயற்பாடுகள் குறித்துப் புரிந்து வருவதுடன், சர்வதேச மட்டத்தில் புலிகளின் செல்வாக்குக் குறைவடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதால் புலிகளின் பயணத்துக்கு மாற்று ஏற்பாடுகள்

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு



கொழும்பு —

புதிய அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிப்பதனாலேயே, பொதுமக்கள் பயணம் செய்யும் ஹெலியைப் புலிகளின் பயணத்துக்கு ஏற்பாடு செய்துள்ளதாக, அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பாகக் கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் கெகலிய ரம்புக் வெல இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது -

கிழக்கிலிருந்து கிளிநொச்சிக்கு விடுதலைப்புலிப் போராளிகளை அழைத்து வர தனியார் ஹெலியை ஒழுங்கு செய்வது தொடர்பாக தெரிவித்துள் ளோம்.

32 போராளிகள் பயணிப்பதற்கான வகையில் அது போதுமானது அல்ல என விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். ஒவ்வொரு குழு, குழுவினராக விடுதலைப்புலிகள் பயணம் மேற்கொள்ளலாம் என்றும் அதற்கான பாதுகாப்புகளை செய்வோம் என்றும் நோர்வே குழுவிடம் தெரிவித்தோம்.

மேலும் சில விடயங் களையும் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்தோம்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில முடிவுகள் தவறானது என்று அரசாங்கம் கருதுகிறது. முன்னைய செயற்பாடுகளில் எது சரி? தவறு? என்று சொல்ல முடியாது.

சரியான காரணங்கள் இருப்பின் ஜெனிவாப் பேச்சுக்களுக்கான நாட்களை மாற்றிக்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது.

அவுஸ்ரேலிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பான கருணா குழு தொடர்பான விடியோ பதிவின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் உள்ளது. அது உண்மையிலேயே அரச கட்டுப்பாட்டுப்பகுதிதான் என்பது அதில் தெளிவுபடுத்தப்படவில்லை. எங்காவது ஓரிடத்தில் படமெடுத்துவிட்டு, அரச கட்டுப்பாட்டுப் பகுதி என்று கூடக் கூறலாம். உறுதியான ஆதாரங்கள் அதில் இல்லை எனத் தெரிவித்தார்.

# சுயாதீனக்குழு நியமன விவகாரம் நாடாளுமன்ற கூட்டக் கோரிக்கை

கொழும்பு —

சுயாதீனக் குழுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளமை தொடர்பாக விவாதிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூர்ய கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

அரசியல் யாப்பை மீறி சுயாதீனக் குழுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். இது பாரதூரமான விடயமாகும். ஆகையால் உடனே நாடாளுமன்றத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டும். மே 9 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் வரை நாம் காத்திருக்க முடியாது.

அமைதி முயற்சிகளின் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் மகிந்தவின் இத்தகைய செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தில் பாதகமான தாக்கத்தையே உருவாக்கும்.

சர்வாதிகாரத்துக்கான முதல் படிநிலையை மகிந்த ராஜபக்ஷ மேற் கொண்டுள்ளார். இது விபரீதங்களுக்கு வழிவகுக்கும் எனத் தெரிவித்தார்.

### பாகிஸ்தான் கிரிக்கெட் அணி

# களத்தடுப்பு பயிற்சியாளராக ஜொன்டி ரொட்ஸ் நியமனம்



கராச்சி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி ரொட்ஸ் நியமிக்கப்படவுள்ளார்.

இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் போட்டிகளில் வலுவான அணிகளை வீழ்த்தினாலும், ஒருநாள் போட்டித் தொடர்களில் அதிர்ச்சித் தோல்விகள் பலவற்றைச் சந்தித்து வருகிறது. அந்த அணியின் களத்தடுப்பு மோசமாக இருக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகளில் அடுத்த ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ளதால், பாகிஸ்தான் அணியை மேலும் வலுப்படுத்த அந்த நாட்டு கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

அதற்காக களத்தடுப்பு பயிற்சியாளராக குறுகிய காலத்துக்கு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி ரொட்ஸை நியமிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

37 வயதான ஜொன்டி ரொட்ஸ், தென்னாபிரிக்க அணியில் 1992 ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை விளையாடினார். 52 டெஸ்ட் மற்றும் 245 ஒருநாள் போட்டிகளில் அவர் ஆடியுள்ளார்.

ஜொன்டி ரொட்ஸ் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக விளங்கியவர். அவரது களத்தடுப்பு அனைவரும் வியந்து பாராட்டும் வகையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டி யாழ்.இந்து அணி சம்பியன்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து ஆடிய யாழ்.இந்துக் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனானது.

இறுதிப் போட்டியில் ஆடிய சிவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொணடது.

மூன்றாம் இடத்துக்கான போட்டிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி வருகை தராமையால், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கு 3ஆம் இடம் வழங்கப்பட்டது.

முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் மாகாணமட்டப் போட்டிக்கான தகுதியைப் பெற்றன. (58)

# இன்று நடைபெறும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்

இலங்கை கிரிக்கெட்டின் 3ஆம் பிரிவுக்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள கழகத்தைத் தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் ரேக்கி கிண்ண சுற்றுப் போட்டியில் இன்று காலை 9 மணிக்கு இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோட்ஸ் அணியை எதிர்த்து யாழ். பற்றீசியன் அணி மோதும் போட்டியும்,

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளன. (58)

# பிரதேச செயலக கிரிக்கெட் ஜெற்லைனேர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்

யாழ்.பிரதேச செயலகை மட்ட கிரிக்கெட் போட்டியில், கொழும்புத்துறை ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை 38 ஓட்டங்களால் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழக அணி 14 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த 87 ஓட்டங்களைப் பெற்றது. காண்டீபன் 12 மற்றும் குமார் 17 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வின்செற், தஸ்மன் ஆகியோர் தலா 3, மினிசியஸ், றெக்கி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய குருநகர் பாடும்மீன் அணி அடுத்தடுத்து 12.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதனால், தோல்வியைத் தழுவிக் கொண்டது.

பந்துவீச்சில் நிர்மலன், காண்டீபன், குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# இந்திய கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன்

## சகீர்கான் நம்பிக்கை தெரிவிப்பு



புதுடெல்கி

இந்திய கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என்று வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான சகீர்கான் சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் இந்திய அணியில் இடம் பெறவில்லை.

அத்துடன், அடுத்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவுள்ள இந்திய அணியிலும் அவர் சேர்க்கப்படவில்லை. இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் ஸ்ரீசந்த், ஆர்.பி.சிங், முனாப் பட்டேல் ஆகியோரின் வருகையால் சகீர்கானுக்கு மீண்டும் அணியில் இடம் கிடைக்குமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

சகீர்கான் தற்போது கவுண்டி அணியில் ஆடி வருகிறார். இந்த நிலையில் சகீர்கான் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது -

இங்கிலாந்துக்கு எதிரான போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இடம் கிடைக்காதது எனக்கு மிகுந்த அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்தது. அணியில் இருந்து நீக்கப்பட்டதற்கு விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆடும்போது ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த ஆட்டத்தை அணிக்கு அளிக்கவேண்டுமென்பது முக்கியமானதாகும். எனது ஆட்டத்தில் எதில் முன்னேற்றம் தேவைப்படுகிறதோ? அதனைச் சரிசெய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

கவுண்டி அணியில் ஆடினால் நல்லது என்று வசீம் அக்ரம், ஸ்ரீநாத் ஆகியோர் தெரிவித்த ஆலோசனையின்படி செயல்பட்டு வருகிறேன்.

கவுண்டி போட்டிகளில் சிறப்பாக ஆடி தேர்வாளர்களின் கவனத்தை என் பக்கம் திருப்பி, எதிர்வரும் போட்டிகளில் இந்திய அணியில் இடம் பிடிக்க முடியும் என்று நம்புகிறேன். இந்திய அணியில் இடம்பிடிக்க புதிய பந்து வீச்சாளர்களின் போட்டி இருப்பது நல்லதுதான்.

இதன்மூலம் நாம் மேலும் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டும். இது அணிக்கும் மிகவும் நல்ல பலனை அளிக்கும். இவ்வாறு சகீர்கான் கூறினார்.

# உதைபந்தாட்டப் போட்டியில் பாடும்மீன் அணிக்கு வெற்றி

கொக்குவில்

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியும், பாசையூர் சென்.அன்ரனீஸ் அணியும் கலந்துகொண்டன.

போட்டி நேரம் முடியும்வரை எந்த அணியும் கோல்கள் எதனையும் போடவில்லை. வெற்றியை நிர்ணயிக்க தலா 5 தண்டனை உதைகள் வழங்கப்பட்டன. இதில் 2-0 என்ற அடிப்படையில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (206)

# விளையாட்டு

# கரப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் வெற்றி

வடமராட்சி

வல்வெட்டி வேவில் ஒற்றுமை விளையாட்டுக் கழகம் புது வருடத்தை முன்னிட்டு அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே கரப்பந்தாட்டச் (ஓவர் கேம்) சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் இந்த வருட சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.


வல்வெட்டி வேவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊறணி காந்தி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் 15:6, 2:15, 15:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இந்தப் போடிக்கு சாயி பாபா நடுவராகவும், லயன் சச்சி தவச்செல்வன் பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (58)

# தொடர் போட்டிகளால் வீரர்களின் திறன் பாதிக்கும்

## றிக்கி பொண்டிங் தெரிவிப்பு



டாக்கா

தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்பது வீரர்களின் ஆட்டத்திறனைப் பாதிக்குமென அவுஸ்ரேலிய அணியின் கப்டன் றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள அவுஸ்ரேலிய அணி இரண்டு டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி வெற்றியைக் கைப்பற்ற போராடவேண்டியிருந்தது. இது குறித்து பொண்டிங் கூறியதாவது -

ஓய்வின்றி போட்டிகளில் விளையாடி வருவதால் வீரர்கள் உடலளவிலும், மனதளவிலும் சோர்வடைந்துள்ளனர். இதனால் முதல் போட்டியில் சற்றுத் தடுமாறவேண்டியதாகிவிட்டது.

கடந்த 5 வாரங்களாக ஐந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளோம். தொடர்ந்து விளையாடுவது வீரர்களின் ஆட்டத்திறனை மிகவும் பாதிக்கும். ஒரு டெஸ்ட் போட்டிக்கும் மற்றொரு டெஸ்ட் போட்டிக்குமிடையே குறைந்தது மூன்று நாட்களாவது ஓய்வுவேண்டுமென வீரர்கள் கருதுகிறார்கள். இதை சர்வதேச கிரிக்கெட் சபை கருத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறு பொண்டிங் தெரிவித்தார்.

# அரியாலை ஐக்கிய அணியை வென்றது ஓல்ட்கோல்ட்ஸ்

யாழ்ப்பாணம்

இலங்கை கிரிக்கெட்டின் 3ஆம் பிரிவுக்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்படும் 50 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான ரேக்கி கிண்ண முதல்சுற்றுப் போட்டிகளின் இரண்டாம் கட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய வட்டுக்கோட்டை ஓல்கோட்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 24 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 84 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

அந்த அணி சார்பாக சுதர்சன் 14, டயான் ஆட்டமிழக்காமல் 13, துஷாந் 10, சண்முகலிங்கம் 8, காண்டீபன் 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சுதன் 5, திலீபன் மற்றும் செந்தூரன் ஆகியோர் தலா 2, அமலதீசன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் அணி 22 ஓவர்களில் வெற்றிக்குத் தேவையான 85 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் நிரோசன் 24, ஜெயசுதன் 10, செந்தூரன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் சார்பில் சண்முகலிங்கம் 2, சுதர்சன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

# யாழ். குடாநாட்டு வன்முறைகளில் 10 நாட்களில் 21 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் —

இந்தமாதம் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான 10 நாட்களில் மட்டும் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 21 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களால் கடந்த 10 நாட்களில் மட்டும் 21 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களிலும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களிலும் சிக்கி பெரும்பாலும் 20 - 30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே பலியாகியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களின் உச்சக்கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை புத்தூர் பகுதியில் மிகக் கொடூரமான முறையில் ஐந்து இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெரும்பாலும் இந்தக் கொலைச் சம்பவங்கள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலும், இராணுவ முகாம்கள், காவலரண்களுக்கு அருகிலேயே நிகழ்த்தப்பட்டிருப்பதோடு, இந்தக் கொலைச் சம்பவங்களோடு தொடர்புபட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள் இராணுவச் சீருடைகளை ஒத்திருந்த இராணுவ உடைகள் மற்றும் சப்பாத்துக்களை அணிந்திருந்தாகவும் சம்பவங்களை நேரில் கண்டோர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவங்களால் யாழ். குடாநாட்டு மக்கள் அச்சத்தில் உறைந்திருப்பதோடு, தமது பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்காக வன்னிப்பிரதேசத்தை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கரவெட்டி பிரதேச செயலகத்தில் 189 பேருக்கு வீட்டுத்திட்ட அனுமதி

கரவெட்டி —

உலகவங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் 6 கிராமங்களுக்கு வீட்டுத் திட்டத்துக்கான அனுமதிகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள - கப்புது, கரம்பன், அந்தணன்திடல், காட்டுப்புலம், கொற்றாவத்தை, இலந்தைக்காடு ஆகிய கிராமங்களிலுள்ள 189 பயனாளிகளுக்கே வீட்டுத்திட்ட அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அந்தந்தக் கிராமங்களிலுள்ள பொது இடங்களில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்கும்படி கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார். (12)

# பொதுநலவாய நாடுகள் மையத்தால் கட்டுரைப் போட்டி நடத்த ஏற்பாடு!

யாழ்ப்பாணம் —

பொதுநலவாய நாடுகளின் ஆசிய மையத்தால் நடத்தப்படும் கட்டுரை போட்டியில் இலங்கையர்கள் பங்குபற்றலாம். இதற்கான கட்டுரை தற்போது கோரப்பட்டுள்ளது.

இளம் சமுதாயமும் உளநலமும் - அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் (Young People and Health - Addressing Challenges) எனும் தலைப்பிலான இந்தக் கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். கட்டுரை 1500 சொற்களில் அமைவதோடு, கணினியில் தட்டச்சு செய்து அனுப்பப்படல் வேண்டும். எழுத்து வடிவம் (Font Style) ரைம்ஸ் (Times New Roman) அல்லது ஏரியல் (Arial) இலும் எழுத்தளவு (Font size) 12 ஆகவும் இருக்க வேண்டும்.

கட்டுரைகள் யாவும் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக Mrs. Saraswathy Rajagopal, Programme Manager Youth Development, Commonwelth Youth Programme Asia Center, Sector - 12 PEC Campus, Chandigarh - 160012, India என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம். மின்னஞ்சல் முகவரி rsaraswathy 2003 @ Yahoo.com அல்லது admin @ cypasia.org.

வெற்றிபெறும் 03 கட்டுரைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் பரிசு பெறும் கட்டுரைக்கு 200 பவுண்ஸ் பணமும், சான்றிதழும் வழங்கப்படும், இரண்டாம் இடம் பெறும் கட்டுரைக்கு 150 பவுண்ஸ் பணமும், சான்றிதழும் வழங்கப்படும், மூன்றாவது இடம்பெறும் கட்டுரைக்கு 100 பவுண்ஸ் பணமும் சான்றிதழும் வழங்கப்படும். அத்துடன் முதல் மூன்று இடங்கள் பெறும் கட்டுரைகள் Cyp Young Asia News Letter சஞ்சிகையிலும் வெளியாகும். இந்தக் கட்டுரைப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை நமது ஈழநாடு அலுவலகத்தில் பார்வையிடலாம்.(ரி)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினநிகழ்வு!

சுதுமலை —

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ சட்ட நாதஸ்வாமி தேவஸ்தானத்தில் இன்று காலை 9.00 மணியளவில் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழாவை நடத்தவுள்ளனர். அப்பர் சுவாமிகளுக்கு விசேட பூசை, வழிபாடு, அப்பர் சுவமிகளின் தேவாரப்பாடல்கள் பாராயணம், சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

மாலை 5 மணியளவில் வண். கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மாலைப் பூசையைத் தொடர்ந்து ஆலயத்தில் வீற்றிருக்கும் நால்வர் பெருமக்களுக்கு அபிசேக ஆராதனை, வழிபாடு நடைபெற்று அப்பர் சுவாமிகளின் அருட்பாடல்கள் பாராயணம், சொற்பொழிவு ஆகியவற்றுடன் தினமும் நடைபெறும் முதலாந் திருமுறை முற்றோதல் பாராயணமும் நடைபெறும்.

# சமூக உளவியல் செயற்திட்டம்

தாளையடி —

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவுடன் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கான சமூக உளவியல் செயற்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க ஆரம்ப சுகாதார கவனிப்பு ஆலோசகர் ஜொயின் என் விஸ்ரில், தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி பத்மநாபன் லுக்குமார் ஆகியோர் யாழ்ப்பாண கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஒரு வருட காலத்துக்கு சமூக உளவியல் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

# பாடசாலைகளின் நிகழ்வுகளுக்கு புத்திஜீவிகளையே அழைக்கவேண்டும்

## கல்வியமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு —

அரசாங்க பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு கல்வித்துறை சார் நிபுணத்துவம் பெற்ற புத்திஜீவிகளையே பிரதம விருந்தினர்களாக அழைக்க வேண்டுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலை நிகழ்வுகளுக்கு விருந்தினர்களை அழைப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே தெரிவித்தார்.

பாடசாலை நிகழ்வுகளான வருடாந்த பரிசளிப்பு உட்பட ஏனைய நிகழ்வுகளின் போது மாணவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கக்கூடிய விதத்தில் கல்வித் துறையின் உயர்மட்ட சேவையிலுள்ள புத்திஜீவிகளே அழைக்கப்படவேண்டும்.

இதன்படி பல்கலைக்கழக வேந்தர்கள், உபவேந்தர்கள், பேராசிரியர்கள் போன்ற கல்விமான்களையே நிகழ்வுகளுக்கு அழைக்க வேண்டுமெனவும் கல்வியமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேவேளை மக்கள் பிரதிநிதி ஒருவர் குறித்த பாடசாலையின் பௌதீக வளத் தேவையொன்றை நிறைவேற்ற நிதி வழங்கினால் மட்டுமே நிகழ்வுகளுக்கு அவர் அதிதியாக அழைக்கப்படவேண்டும்.

அத்துடன் பாடசாலை நிகழ்வுகளை நடத்தும் போது மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இரண்டு மணி நேரத்துக்குள் நிகழ்வுகள் நிறைவு செய்யப்பட வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதான வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கு படையினரால தடை விதிப்பு!

கோண்டாவில் —

பிரதான வீதியோரங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக சைக்கிள்கள், வாகனங்கள் போன்றவற்றை நிறுத்த வேண்டாமென படையினர் அச்சுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

பிரதான வீதியோரங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும், வீதியோரங்களிலும் நிறுத்தப்படும் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களைக் கண்டதும் வீதிக் காவலில் ஈடுபடுகின்ற படையினர் ஓடிவந்து மிரட்டுவது போன்று, நிறுத்தப்பட்ட வானங்களைக் கடுமையான சோதனைக் குட்படுத்துவதோடு, சைக்கிள்களைத் தமது சப்பாத்துக் கால்களால் உதைந்து கீழே தள்ளிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வீதியோரங்கள், கடைகளுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்த வேண்டாமெனவும், கிளைமோர் குண்டுத்தாக்குதல்களுக்கு இவ்வாறான வாகனங்கள் பயன்படுத்தப்படுவதனாலேயே அச்சம் காரணமாகத் தாம் இவ்வாறான சோதனைகளை மேற்கொள்வதாகவும் படையினர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

படையினரின் இத்தகைய செயல்களால் பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (82)

# திராட்சை செய்கையாளர்கள் விபரம் திரட்டல்

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள திராட்சை செய்கையாளர்கள் உடனடியாகத் திராட்சை செய்கை குறித்த விபரங்களைத் தருமாறு அந்தப்பகுதி விவசாயப் போதனாசிரியர் சம்பந்தப்பட்ட விவசாயிகளைக் கோரியுள்ளார்.

மேற்படி பகுதிகளில் திராட்சை பயிரிடப்படும் நிலத்தின் அளவு, செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை, திராட்சையின் பயிர்செய் காலத்தில் கிடைக்கும் மொத்த உற்பத்தியின்அளவு போன்ற விபரங்களை உடனடியாகத் தமக்கு தருமாறு விவசாய போதனாசிரியரால் வேண்டப்பட்டுள்ளது. (44)

# மஹா கும்பாபிஷேகம்

மானிப்பாய் —

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரம் வில்லின் இலுப்பை நின்ற நாச்சிமார் என அழைக்கப்படும் முருகன் ஆலயத்தின் புனருத்தாரண மஹா கும்பாபிஷேக விழா - இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தினர். (100)


# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ர.சஞ்சிவ்
முகவரி : கொடிகாமம்.

அகவை இரண்டு



பெயர் : எஸ்.விஜனா
முகவரி : தொண்டமனாறு

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு ..........
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
..........
பெற்றோர் ஒப்பம்


# டெங்கு தடுப்பு வாரம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிநிதிப் பணிப்பாளர் பணிமனையால் இந்த மாதம் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான நாட்களை ''டெங்கு தடுப்பு வாரமாக'' பிரகடனப்படுத்தியுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# பஸ்வண்டி அன்பளிப்பு

கோண்டாவில் —

கோண்டாவில் கிழக்கு சிவபூமி மனவிருத்தி சிறுவர் பாடசாலைக்கென மாணவர்களது போக்குவரத்து சேவை கருதி, யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் பெறுமதிவாய்ந்த பஸ்வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படவிருக்கிறது.

104 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்விபயில்கின்ற போதிலும் போக்குவரத்து தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் மூலம் தீர்த்துவைக்கப்படவிருப்பதாகவும், மாணவர்களின் போக்குவரத்தில் இனி எந்தவித குறைபாடுகளும் ஏற்படமாட்டாதெனவும் ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (82)

# புராண படலம்

மானிப்பாய் —

சாவகச்சேரி வாரிவளவு சிவன் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் புராண படலம் நடைபெற்று அதன் பின்னர் மகேஸ்வர பூசையும் நடைபெறுமென தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் செயலாளர் சி.குலசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, அன்றைய தினம் மீசாலை நாவலடிப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

விமலனின்

# பாலைவனச் சோலை

அபுதாபியில் முதன்முதலாக நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடரில் இந்தியாவும், பாகிஸ்தானும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றிருந்தமை ரசிகர்கள் அறிந்த விடயம் தான்.



இன்சமாம் – மணலை மலராக்கு....

156 சர்வதேச ஒரு நாள் போட்டிகள் நடைபெற்ற சார்ஜா மைதானத்தில் ICC யின் நெருக்கடி மிகுந்த போட்டி அட்டவணைகள் உட்படப் பல்வேறு காரணங்களால் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் தடைப்பட்டிருந்த கிரிக்கெட் போட்டிகள் - தற்போது அபுதாபியில் மீளவும் களைகட்டத் தொடங்கியிருப்பது ரசிகர்களைக் களிகொள்ளச் செய்யும் என்பதில் எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லை.

ரசிகர்கள் மட்டுமல்ல, வீரர்கள் பொறுத்தும் சார்ஜா மற்றும் அபுதாபியில் ஆடுவதென்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகவே விளங்கிவந்துள்ளது. இதற்குக் காரணம் சுல்தான்களால் அள்ளி இறைக்கப்படும் வெள்ளிப் பணம் தான்.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு . நடந்து முடிந்த தொடரில் வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணம்தான்.

இந்திய அணியும், பாகிஸ்தான் அணியும் ஏன் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றன என்பது பரிசளிப்பு நிகழ்வின் போது 45 kg எடையுள்ள வெற்றிக் கிண்ணத்தை வழங்கிய போது தான் தெரியவந்தது . ஒரு அணித்தலைவரால் மட்டும் இத்தனை நிறையுடைய கிண்ணத்தைத் தூக்க இயலாது - இரு அணித்தலைவர்களும் சேர்ந்தே இதனை ஏந்திக் கொள்ளமுடியும் என்பது போல - ராவிட்டினதும் - இன்சமாமினதும் கரங்களில் வெற்றிக் கிண்ணம் தவழ்ந்த போது புலனாகியது.

சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணங்களுள், அதி கூடிய எடை கொண்ட வெற்றிக் கிண்ணமாக இதுவே இருக்கும் போலுள்ளது.

போட்டி அமைப்பாளர்கள் முதல் போட்டியின்போது, வாணவேடிக்கையால் அந்தகாரப் பொழுதையே ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தியிருந்தமையும், ஆண்களும், பெண்களுமாய் இணைந்து வழங்கிய நடன நிகழ்வுகளும் கண்களுக்குப் பெருவிருந்தாக அமைந்திருந்தது.

இந்தியஅணி பொறுத்து முதற்போட்டியில் ராவிட்டுடன் தொடக்க வீரராக யாரைக் களமிறக்கலாம் என்பதில் செப்பல் மண்டையைப் பிய்த்திருப்பார் என்றே தோன்றுகிறது.


வேணுகோபால் ராவ் – மணல் வேர்

ஷேவாக் OUT OF FORM ஆக இருந்ததால் அவரை இறக்குவது சரியில்லை என்று தோன்றினாலும், பாகிஸ்தானுக்கு எதிராக ஷேவாக்கின் ஓட்டக் குவிப்பும், சராசரியும் உயர்வாக இருந்ததையும், கருத்தில் எடுக்க வேண்டியதொரு நிர்ப்பந்தம். ஆனாலும் இறுதியில் வாய்ப்புக் கிடைத்தது உதப்பாவுக்கே.

இலங்கை சுற்றுப் பயணத்தில் இருந்து, பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பலம் அதிகரித்து வருவதென்பது கண்கூடான விடயம். இதற்குக் காரணம் பயிற்சியாளர் பொப் வூல்மரைவிட பந்துவீச்சுப் பயிற்சிக்கென்று வக்கார் யுனுஸை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்திருந்ததே.

அதற்கு வலுச்சேர்ப்பது போன்று முதற்போட்டியில் 197 ஓட்டங்களுக்குள் இந்திய ஆட்டமிழப்பு அமைந்துவிட்டது. இந்த எளிதான வெற்றி இலக்கை ஆறு விக்கெட்டுக்களால் அடைந்த பாகிஸ்தான் - அபுதாபியில் முதல் வெற்றியைப் பெற்ற அணியாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டது.

இருந்த போதும் தளர்ந்து போகாத செப்பலும், ராவிட்டும் தமது தாக்குதல் பாணியில் ஷேவாக்கிற்கு மீளவும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க - அதுவே இந்திய அணியின் வெற்றியின் அடித்தளமாக மாறிவிட்டது. சரியான நேரத்தில் OUT OF FORM இல் இருந்த ஷேவாக் அதிலிருந்து விடுபட்டு இந்திய அணிக்குக் கைகொடுத்தார். அத்தோடு தன்னை அணியிலிருந்து நீக்கவேண்டும் என்று கூறிய பலரது வாயையும் அடைத்துவிட்டார்.

தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கும் ஒரு சில ஒருநாள் போட்டிகளுக்கு மத்தியில் - அதிகாலை 2 மணிவரை நடைபெற்ற இந்தப் போட்டிகளை ரசிகர்கள் கொட்டக்கொட்ட முழித்திருந்து பார்த்துள்ளனர் என்றால் - அது இந்திய - பாகிஸ்தான் போட்டிகளில் ஏற்படும் விறுவிறுப்புத் தன்மையில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையே. இந்த நம்பிக்கையில் இரு அணிகளும் மண் அள்ளிப் போடாதது மனதுக்கு உவப்பான விடயமே.




மக்டலினின்

# இலைமறை கனி என்றினி

சில விளையாட்டு வீரர்களின் திறமை பற்றி, அவர்கள் சாதனைகள் பற்றி அடிக்கடி எழுதித்தள்ளும் ஊடகங்கள்- மின்னாமல், முழங்காமல் முன்னணிக்கு வந்து நிற்கும் வீர்களைப் பார்க்கும்போது மலைத்துத் தான் போகின்றன. கிரிக்கெட் ஆட்டத்தில் பிறைன் லாறா, சச்சின் டெண்டுல்கர் பற்றி எழுதப்பட்டதைப்போல் ரிக்கி பொண்டிங் பற்றி எழுதப்படவில்லை. ஆனால், டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய சதங்கள் பெறப்போகின்றவர் ரிக்கி பொண்டிங் என்பது அவ்வளவு கடினமான சமன்பாடு அல்ல என்பது இப்போது தெரிகிறது.


மக்காயா என்றினி – ஊடறுத்துப் பாயும்

இதே போலத்தான் பந்து வீச்சாளர் வரிசையின் நிலைமையும், கிளென்மக்ரா, ஷோன் பொலக் அளவுக்கு மக்காயா என்ரினி பேசப்படவில்லை. ஆனால், இப்போது விமர்சகர்கள், தரவு நிரல்படுத்துவோரை தன்பக்கம் திரும்ப வைத்துள்ளார் என்ரினி. மிக அண்மையில் வெளியிடப்ட்ட ICC தரக் கணிப் பின்படி இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பவர் இருபத்தெட்டு வயதுதான என்ரினி.

இவருக்கு முன்னாள் அதிதிறமை வாய்ந்த முரளி நிற்கிறார். தற்போது நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய மூன்று டெஸ்ட் போட்டிகளும் தென்னாபிரிக்கா தோல்வி கண்டது. ஆனால், அந்த அணியில் இருந்த வேகப் பந்துவீச்சாளர் என்ரினி - தரவரிசையில் இரண்டாம் இடத்துக்கு உயரும் வகையில் பந்து வீசியிருக்கிறார். என்ரினி இந்தத் தொடரில் வீழ்த்திய விக்கெட்டுகள் பத்தொன்பது. இதற்கு அடுத்த இடம் பெற்றவர் வீழ்த்திய விக்கெட்டுகள் ஏழுமட்டுமே. இவரது சிறப்புக்கு ஒரு உதாரணம் கூறலாம். அவுஸ்ரேலியா ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹேடன் ஆறுமுறையும் என்ரினியால் சரிக்கப்பட்டார். இற்றை வரையில் ஷோன் பொலக் தரவுகள் ரீதியாக முதன்மை பெற்றவர். அன்ரூ நெல் துடுப்பாட்ட வீரரை முறைப்பதும், கடும் வார்த்தை பேசுவதுமான வேகப் பந்து வீச்சாளர்களுக்கான கொதிநிலையைக் கூடுதலாகவே கொண்டிருக்கிறார். இருந்தாலும், என்ரினி விக்கெட்டுக்களைக் கூடுதலாகச் சரிக்கிறார் என்கிறார் ஒரு விமர்சகர். கடந்த நான்கு வருட தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர்களின் சராசரியை எடுத்தும் பார்த்தால், ஒரு வருடத்தை விட மற்றைய மூன்று வருடங்களாலும் என்ரினியே முதன்மை பெற்றி விளங்குகின்றார். 2004 இல் மட்டும் சிறிய தொரு இடைவெளியில் ஷோன் பொலக் முன்னணி வகிக்கிறார். 2003 இல் சர்வதேச ரீதியாக அதிகூடிய 59 விக்கெட்டுகளை என்ரினியே எடுத்துள்ளார். முதன்மையாகப் பேசப்பட்ட அத்தனை வேகப்பந்து வீச்சாளர்களும் இவருக்குப் பின்னால் தான். 2002 இன் ஆரம்பத்தில் இருந்து இதுவரை 44 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 202 விக்கெட்டுகள் பெற்றுள்ளார் இவர். இந்தத் தரவு ஒரு அணியின் முதன்மை வேகப் பந்து வீச்சாளரின் கூடுதலான ஓவர்களை வீசும் ஒருவரின் சராசரியாக மட்டுமே இருக்க முடியும் என்று கருதும் விமர்சகர்கள், அந்த ஒரு சிலருக்குள் என்ரினியும் வந்து விட்டார் என்று கூறுகிறார்கள்.



ஷோன் பொலக் – ஊற்றுக்கண்

தென்னாபிரிக்காவின் வெள்ளை இனத்தவர்கள் தவிர வேறுயாரும் இடம் பிடிக்க முடியாதென்ற நிறவெறி கொள்கை நீங்கிய பின், முதன் முதலாக கிரிக்கெட் அணியில் புகுந்தவர் மக்காயா என்ரினி. இவரது நுளைவு எத்தகைய கனதியானது என்பது இப்போது புரிகிறது. 28 வயதாகும் என்ரினிக்கு இன்னும் பல சாதனை புரியும் திறமை இருக்கிறது. வயதும் இருக்கிறது. சாதனைகள் இவர் கையில்.

ஜெயராட்டின்

# இரு கோடுகள்

திடகளப் போட்டி உலகில் 100 மீற்றர் ஓட்டம் என்பது மிகுந்த கவனத்தைப் பெறுவது. இந்த நிகழ்வில் இப்போது அதிகமாகப் பேசப்படுபவர்கள் இரண்டு பேர். ஒருவர் அமெரிக்க வீரர் - ஒலிம்பிக் சாம்பியன் ஜஸ்ரின் கெட்லின். இன்னொருவர் 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை நேரமான 9.77 செக்கன் காலக் கணக்கை தன் கால்களுக்குள் அகப்படுத்திய ஜமெய்க்காவின் அஸாபா பவல். இதிலும் என்ன வென்றால் கெட்லின், அஸாபா பவலைச் சீண்டிக் கொண்டே இருக்கிறார்.



அஸாபா பவல் – அவனும் இவனே

எனது உளவியல், உடலியல் பலமானது ரொம்பவும் அதிகம். இதற்கு ஈடுகொடுக்க அஸாபா பவலால் முடியாது என்கிறார் இவர். ஜூன் மாதம் மூன்றாம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெறவிருக்கும் போட்டியில், இருவரும் சந்திக்கப் போகிறார்கள் போலத் தெரிகிறது. இதற்கு முன்னோடியாகத்தான் கெட்லின் வார்த்தையாடல்களை ஆரம்பித்திருக்கிறார் போலத் தெரிகிறது. அஸாபா பவலை நான் சீண்டிப் பார்க்கவில்லை. ஆனால், பாரிய கனதியான போட்டிகளுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் பக்குவம் பவலுக்குப் போதாது என்கிறார் கெட்லின்.

கெட்லின் மிகத்திறமையானவரே. 100 மீற்றர் 2004 ஒலிம்பிக் தங்கம், 2005 வேர்ல்ட் சாம்பியன்ஸிப் தங்கம் இரண்டும் கெட்லினின் கழுத்தில். அதோடு ஹெல்ஸிங்கில் நடைபெற்ற 200 மீற்றர் தங்கமும் இவருக்கே. ஆனால், உலக சாதனை நேரம் பவலுக்கு. ஆனால், பவல் இரண்டுமுறை கெட்லினிடம் தோல்வியுற்றதும் உண்மை. இருந்தும் தற்போது மெல்பேனில் நடைபெற்று முடிந்த போட்டிகளில் அஸாபா பவல் 10.03 செக்கன்களில் ஓடித் தங்கத்தை வென்றார். இந்தப் போட்டிகளில் அமெரிக்க வீரர்கள் கலந்து கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ஜஸ்ரின் கெற்லின் – இவனும் அவனே

கெட்லினுக்கு ஒரு இலக்கு இருக்கிறது. இலட்சியம் இருக்கிறது. அதாவது 100 மீற்றரை 9.75 செக்கனில் ஓடி உலக சாதனையை இன்னும் குறுக்கலாம் என்பது அவரது திட நம்பிக்கை.

எங்கள் கருத்தொன்றுண்டு. உலகப் பணக்கார நாடு அமெரிக்காவின் ஜஸ்ரின் கெட்லினாக இருந்தால் என்ன, வளர்ந்து வரும் நாடான சிறிய தீவு நாடு ஜமேய்க்காவின் அஸாபா பவலாக இருந்தாலென்ன இருவரும் நாங்கள் நேசிக்கும் கறுப்பின வீரர்கள்.

அதிசயிக்கத்தக்க எந்தச் சாதனையும் நீங்கள் யார் பெற்றாலும் எங்களுக்கு மகிழ்ச்சியே. ஏனெனில் நீங்கள் எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள்.

லிவிங்ஸ்ரனின்

# சிறுபிள்ளை அறுவடை செய்யும்


பிளின்ரோப் - வோண் மனதாலும் மன்னவர்கள்

இங்கிலாந்து அணிவீரர் இளமையும் அழகும் நிறைந்த அன்ரூ பிளின்ரொப் 2005 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரின் பின் கதாநாயகனாகவே மாறிவிட்ட வர். இப்போது இந்தியாவுக்கு வந்த இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பை நிர்பந்தத் தின் பேரில் ஏற்று, பல பரிமா ணங்களிலும் தன்னை நிரூபித்த பிளின்ரொப் SUPER STAR என்ற பெயரையே தட்டிக்கொள்ள மிகவும் தகுதி பெற்றார். இந்த நிலையில் விஸ டன் சஞ்சிகை 2005 ஆம் அண்டின் முன்னணி கிரிக்கெட் நட்சத்திரமாக அன்ரூ பிளின்ரொப்பைத் தெரிவு செய்துள் ளது. இந்தத் தெரிவைச் செய்த குழுவினர் கிரிக்கெட் விமர்சகர்களும், விஸ்டன் பத் திரிகை ஆசிரியர் குழுவினரும் ஆவார்கள். இவருக்கும், ஷேன்வோனுக்கும் இடையில் தான் பெரிய போட்டி இருந்தது. ஆனாலும், பிளின்ரொப் முதலிடத்தைத் தட்டிக் கொண்டுள்ளார். இதற்கு முக்கிய காரணமாக இருந்தது 1989 இன் பின் மதிப்பு மிக்க ஆஷஸ் தொடரை இங்கிலாந்துக்கு வென்று கொடுத்ததில் கனதியான பங்கு பிளின்ரொப்புக்கு இருந்ததே. ஷேன்வோண் பின்தள்ளப்படக் காரணம் என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டுக்கான விஸ்டன் சஞ்சிகையின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர்களாக அன்ரூ பிளின்ரொப்பும், ஷேன் வோனும் காட்சி அளிக்கிறார்கள்.


விஸ்டன் சஞ்சிகையின் இந்த விருதைப் பெறும் மூன்றாவது வீரர் இவராவார். முன்னதாக ஷேன்வோணும், ரிக்கி பொன்ரிங்கும் இந்த விருதைப் பெற்றிருந்தார்கள். இந்தியச் சுற்றுப் பயணத்தின்போது இவ்விருது பற்றி அறிந்துகொண்ட பிளின்ரொப் - மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகக் கூறியிருந்தார்.

விஸ்டனில் இந்தத் தெரிவு எல்லோராலும் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், முதன்மை வீரர்கள் நான்குபேர் அதுவும் அணித்தலைவர் கூட இல்லாத இங்கிலாந்து அணியின் தலைமைப் பதவியை ஏற்று, தன் குறைவான அனுப வத்துடன் இன்னும் கணிசமான கனிஷ்ட வீரர்களையும் இணைந்துக் கொண்டு இந்திய சுற்றுப் பயணத்தை அவர் நடத்தி முடித்த விதம், தென்னாசியக் கிரிக்கெட் ரசிகர் மத்தியில் அவருக்கு மிகுந்த மதிப்பையும், மரியாதையும் ஏற்படுத்தி விட்டது. அத்தோடு மைதானத்துக்கு வெளியில் இங்கிலாந்து அணி நடந்து கொண்ட முறைகளிலும், பிளின்ரொப்பின் கவனமும், கண்காணிப்பும் இருந்தது என்று கூறப்படுகிறது. இந்த வகையில் இன்னொரு கிரீடம் பிளின்ரொப்பின் சிரசில் சூடப்படுகிறது. இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோண் மனதார ஒரு விடயத்தை கூறியிருக்கிறார். இங்கிலாந்துக்கு எதிர்காலத்துக்கான சிறந்த அணித்தலைவர் ஒருவர் கிடைத்து விட்டார் என்பதே அது.

(விஸ்டனின் முன்னணிக் கிரிக்கெட் வீரர் என்ற விருது 2004 ஆம் ஆண்டே அறிமுகப்படுத்தப்பட்டது. விஸ்டன் கிரிக்கெட் வீரர் என்பது வேறொரு விருதாகும்).

நிர்மலனின்

# மனம் என்னும் ரசாயனம்


பிறைன் லாறா - எண்ணிக்கை பிழைக்கும்.

பில் பிரின்டொல் கிரிக்கெட் தொடர்பாக தரவுகள் நிரைப்படுத்தலில் முதன்மையானவர். மிகுந்த நம்பகத் தன்மைக்கு உரியவர். 2006 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ள ஒரு கிரிக்கெட் சஞ்சிகையில் ICC யை இவர் கடு மையாகச் சாடியுள்ளார். கடந்த வருடம் அவுஸ்ரேலி யாவில் நடைபெற்று தோல்வியில் முடிவடைந்த அவுஸ் ரேலிய உலக அணி SUPER SERIES போட்டிகளை நியம தரவுகளுக்குள் சேர்க்கக் கூடாதென்று கடுமையாக வாதிட்டவர் இவர். ICC யின் இந்தச் செயற்பாடு பணம் பண்ணும் நோக்கமொன்றையே கொண்டது என்பது இவரது கருத்து.

மேலும், நாடுகளுக்கு இடையிலான போட்டிகளின் தரவுகளை மட்டுமே என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். அது தொடர்ச்சியான நம்பகதன்மைக்கு உரியது. வேறெ ந்தத் தரவையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிடிவாத மாக நிற்பவர் இவர்.

இன்னொரு விடயத்தையும் இவர் சுட்டிக் காட்டுகின்றார். ஒரு ஆட்டத்தில் TOSS போடப்பட்டு முடிவடைந்ததும் ஆட்டம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து விட்டதாக ICC எடுத்துக் கொள் கிறது. அப்படி இருக்கக் கூடாது. ஆட்டம் ஆரம்பித்த வேளையையே உத்தியோக பூர்வ நேரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார் இவர். இந்த விடயம் தொடர்பான சாதக பாதங்கள் எமக்கு விளங்கவில்லை என்றாலும் ICC தன் இஷ்டத்துக்கு பொருத்தமில்லாத நடவடிக்கைகள் எடுப்பது என்பதுபோல் பிரின்டொல் சுட்டிக் காட்டுவது புரிகிறது.

புள்ளி விபர விடயத்துக்கு மீண்டும் வந்தால் நாங்கள் ஊடகங்களில் அறிந்துகொள்ளும் தரவுகள் ஒரே விடயத்தில் பல இருக்கும் போலத் தெரிகின்றது. எதை ஏற்பது, எதை விடுவது என்ற விளக்கம் கூடவே எழுந்து, ரசிகர்களைக் குழப்பத்துக்கு உள்ளாக்கும் நிலை ஏற்படும். உதாரணமாக 2005 ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டிகளில் லாறா ஏற்படுத்திய ஓட்ட எண்ணிக்கை முதன்மை இப்போது கேள்விக்குரியதாகிவிட்டமையைக் குறிப்பிடலாம்.

எனவே, ஏற்கத்தக்க ஒரு புள்ளி விபரக் கோவை எப்படி ஏற்படுத்த வேண்டும். அதற்கான நியமங்கள் என்ன என்பதையெல்லாம் தீர்மானிப்பது துபாய் சீமான்களுக்குப் பெரியதொரு வில்லங்கமாகத்தான் போகிறது.


சுரேஷ் ரெயினா - எதிர்காலம் எப்படியோ?

என்னவாக இருந்தாலும், சுப்பசீரிஸ் போன்றஆட் டங்களின் எண்ணிக் கைகளை தரவு நிரல்படுத்தலுக்கு உள்ளாக்குவது அபத்தமாகவே தெரி கிறது. குறிப்பாக ஒன்றைக் கூறி முடிக்க லாம். நாடுகளுக்கு இடை யில் நடப்பது மட்டுமே சர் வதேச ரீதியாக அங்கீகரிக் கப்படவேண்டும். மற்றவை ரசிப்பு க்காக மட்டும் இருந்து விட்டுப் போகட் டும். ஏனெனில், ரசிகர்களுக்கும் ஒரு பார்வை இருக்கிறது அல்லவா. சார்ஜா போட்டிகளை ரசிக்க முடிந்தது. அபுதாபி போட்டிகளை ரசிக்க முடிந்தது. ஆனால் அவுஸ்ரேலியா வில் நடைபெற்ற சுப்பசீரிஸ் மனதில் தங்கவேயில்லையே.

வெரோனிக்காவின்

# துணிந்து தூக்கி எறி

இந்தியாவுக்கு வருகை தந்த இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்த மிகமுக்கிய வீரர் மார்க்கஸ் டிரெய்ஸ் கொதிக். ஆனால், இவர் இந்தியாவுக்கு வந்த ஒரு சில தினங்களிலேயே தனது குடும்பம் சார்ந்த தனிப்பட்ட காரணங்களுக்காக மீண்டும் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று கூறி, தன் சுற்றுப் பயணத்தை இடை நிறுத்திக் கொண்டு, இங்கிலாந்து திரும்பி விட்டார். இந்த வேளையில் எல்லோருக்கும் அவர் மீது ஒரு அனுதாபம் பிறந்தது. அந்தவிடயம் சர்ச் சைக்குரிய விடயமாகப் பார்க்கப்படவில்லை. ஆனால், இங்கிலாந்து அணியின் இந் திய சுற்றுப் பயணம் முடிவடைந்து இவர் இல்லாமலே அன்ரூ பிளின்ரோபின் அணி - நாடு திரும்பும் வேளையில் இவர் தனது கருத்தொன்றைக் கூறியுள்ளார். அதாவது - தான் குடும்பத்தில் எற்பட்ட பிரச்ச னைகளால் இங்கிலாந்து திரும்பவில்லை ஒரு வித வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட நோய் கார ணமாகவே நாடு திரும்பினேன் என்று அறிக்கை விட்டுள்ளார்.


ரெயிஸ்கொதிக்- தன்மூளைப்பு தடக்கும்

இப்போதுள்ள கேள்வி என்னவென்றால், இவர் கூறிய பொய்வார்த்தைக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் உடன்பட்டதா. அதோடு பயிற்றுவிப்பாளர் டங்கன் பிளெட் சரும் இவருக்காகப் பரிந்து பேசியிருந்தார். அவருக்கும் ஏதும் தெரியாதா, அல்லது தெரிந்தும் தெரியாதது போல நடந்து கொண்டாரா என்று கேள்வி எழுப்புகிறார்கள். இது ஒரு புறம் இருக்க, டிரெய்ஸ்கொதிக் புண்ணில் புளிப்பத்தின கதையாக தான் இந்தியப் பயணத் தைத் தவிர்த்துக் கொண்டமை பற்றிக் கவ லைப் படவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் ஒரு நல்ல லாபம் தரும் வர்த்த கமாகப் போய்விட்டது என்பதற்கு இவரின் செயற்பாடுகள் நல்லதொரு உதாரணம். இவரின் திறமை மறுக்கப்பட முடியாததொன்று. இவரை இங்கிலாந்துத் தெரிவாளர்கள் தவிர்க்க விரும்ப மாட்டார்கள் என்ற நிலையில், அடுத்த வருமானம் நிச்சயம் என்ற நிலையில் இந்தியச் சுற்றுப்பயணத்தைத் தூக்கி எறிந்திருக்கலாம். DEMAND கூடிய பொருட்களைக் கூடிய விலைக்கு விற்கலாம் அல் லவா. இவர் தனது DEMAND இன் பெறு மதியைப் புரிந்து வைத்திருக்கிறார் போலத் தெரிகிறது.

இந்த நிலையில் தான் இவர்கள் (விளையாட்டு வீரர்கள்) ஒரு நாட்டின் கௌரவத்தைப் பிரதிபலிப்பவர்கள், குறித்த நாட்டின் தூதுவர்கள் என்றெல்லாம் பாராட்டப்படுகிறார்கள். என்ன செய்வது, எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பது இந்த விளையாட்டு வர்த்தக உலகத்தின் விதி. இறுதியாக ஒன்று. இந்தியத் தண்ணீர் சரியில்லை. காற்றுச் சரியி ல்லை. சூரிய ஒளி சரியில்லை. மைதானம் (புல்வெளி) சரியில்லையென்று அசிங்கப்படுத்தாமல் விட்டாரே. அதற்காக அவருக்கு நன்றி

ஜோசப் கிருஸ்ணாவின்

# கரையும் திறமைகள்


சரத் பவார் - கை நிறையக் காசு

பொதுவாக தென்னாசியக் கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் கிரிக்கெட் என்பது மட்டும் தான் ஒரு விளையாட்டு என்பது போலவும், மற்றெல்லா விளையாட்டுக்களும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கப்படுவதாகவும் ஒரு கருத்துண்டு. இது ஓரளவுக்கு ஒத்துக் கொள்ளத்தக்கதொரு குற்றச்சாட்டுத்தான். இந்தக் குற்றச்சாட்டு இந்தியாவிலும் ஓயாத அலைகளாக ஆர்ப்பரித்துக் கொண்டு இருக்கும் இந்த வேளையில் தான், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார் இந்தியாவின் ஏனைய விளை யாட்டுத் துறை வளர்ச்சிக்கு வேண்டி, 50 கோடி இந்திய ரூபாய்களை இந்தியக் கிரிக்கெட் சபை ஒதுக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

உண்மையில் இந்தியா போன்றதொரு பரந்த நாட்டில் இந்தத் தொகை - யானைப் பசிக்கு சோளப் பொரி தான். என்றாலும், ஏனைய விளையாட்டுக்களையும் கிரிக்கெட் யோசித்திருக்கிறது என்பது மனம் கொள்ளத்தக்கது. மேலும் இப்படி ஒரு தொகை யைக் கொடுக்கும் சிந்தனையை கிரிக்கெட்சபை நினைக்காமல் இருந்தால் அது பிழையும் அல்ல.

இது ஒரு புறம் இருக்க, விளையாட்டுத்துறை விமர்சகர் றோகித் பிரிஜ்நாத் இந்தப் பணக் கொடுப்பனவு பற்றிக் கருத்துக் கூறுகையில் விளையாட்டுத்துறை நிபுணத்துவம் பெற்ற உள்ளார்ந்த தகைமையுள்ள ஒரு குழுவிடம் இந்தப் பணம் கையளிக்கப்பட வேண்டும் என்று மிகப் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

உண்மையான பிரச்சினை நிதி முகாமைத்துவத்தில் தான் தங்கியுள்ளது. இந்தியாவாக இருந்தாலென்ன, இலங்கையாக இருந்தாலென்ன கிரிக்கெட் தவிர்ந்த வேறெந்த விளையாட்டு களிலும் வீரர்கள் அனுபவிக்கும் நிதிவாய்ப்புகளைவிட அந்தத் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் அனுபவிப்பது அதிகம் என்ற குற்றச்சாட்டு பொதுவாகக் காணப்படுகிறது.

இலங்கையின் பல விளையாட்டு நிர்வாகிகள் இந்த வகையில் கடும் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக - பத்துவீரர்கள் பங்கேற்கும் சுற்றுப் பய ணத்துக்கு, ஒன்பது உத்தியோகத்தர்கள் செல்வது. செல்பவர்கள் ஊர் சுற்றிப் பார்த்து, மனைவி பிள்ளைகள், குடும்பத்தின ருக்கு நினைவுப் பொருட்கள் வாங்குவது என்று அருமந்த பணமெல்லாம் அநியாய மாகிக் கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.


வெற்றிக் கிண்ணங்கள் வேறும் உண்டு.

இந்த நிலையில் தான் இந்த முறை கேடுகளை யெல்லாம் யார் நேர் சீர்படுத் துவது என்ற பெரிய கேள்வி எழுகிறது. இதைச் செய்யக் கூடியவர்கள் கூட கண்டும் காணாமலும் இருக்கிறா ர்களா என்ற ஆதங்கமும் கூடவே எழுகிறது. இலங்கை யைப் பொறுத்தவரை கிரிக் கெட் வளர்கிறது. மற்றவை தாழ்கிறது என்பது உண்மைதான். ஆனால், அதற்கு யார் கார ணம். மாற்றாந்தாய் மனப்பான்மை என்பது யார் காட்டுவது. விளையாட்டு நிர்வாகிகளே வேலியே பயிரை மேயும் பழமொழிக்கு உள்ளாகும் போது, யாரும் யாரையும் ஓரங் கட்டவில்லை. அந்தந்தத் துறை சார்ந்தவர்களே தம் துறையை வீழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று கொள்ளலாமா. பாவம் விளையாட்டு வீரர்கள். அவர்களின் துன்பம் அவர்களோடு உல் லாசம் கொள்வோர் பாடு ஆனந்தம். இருந்தாலும், ஒரு ஆறுதல். கொமன்வெல்த்போட்டிகளின் தங்கம் வென்ற சிந்தன விதானகேக்கு ஜனாதிபதி உறுதியளித்த பத்து லட்சம் ரூபா உடனே கிடைத்திருக்கிறது. ஒரு நிறுவனம் கார் ஒன்று பரிசளிக்க முன் வந்திருக்கிறது. அதோடு ஒரு வீடும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. செய்யவேண்டியது இதுதான். அது உடனே செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது. எனவே இதில் இருந்து ஒரு புதுப் பாதை தெரியட்டும். வீரர்கள் வளர முழு வேகத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரும் முயற்சிக்கட்டும். அட்டைகள் அகற்றப்படட்டும்.

# செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் நாட்டுப்பற்றாளர் தினம் அனுஷ்டிப்பு

வடமராட்சிகிழக்கு—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நிகழ்வும், நாட்டுப்பற்றாளர் நினைவு தினமும் கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எழுச்சி மண்டபத்தில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் வே.ஜெயபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார். ஈகச் சுடரை மாவீரர் லெப் கேணல் அமுதசுரபியின் தந்தை சி.சின்னப்பு ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை செம்பியன்பற்று தெற்கு கிராம அலுவலர் வி.நடராசா அணிவித்தார். நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப் படங்களுக்கு வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் சி.பொன்னம்பலம், செயலாளர் வ.தவராசா ஆகியோர் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அகவணக்கமும், மலரஞ்சலியும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் நினைவுரைகளை - வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாகராசா, ஆசிரியர் க.சிவகுமார், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜீவரத்தினம் ஆகியோர் நிகழ்தினர். இரவு பாடசாலை அரங்கில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (21)

# முல்லைத்தீவு - சிலாவத்தை மத்தி கிராமத்தில் நிதியின்மையால் வீடு அமைக்கமுடியாத நிலை


முல்லைத்தீவு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு சிலாவத்தை மத்தி கிராமத்தில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தருவதாக வாக்குறுதியளித்த நிறுவனத்தினர், நிதி இல்லாத காரணத்தால் வீடுகளை அமைத்துத்தர முடியாமலுள்ளதாக மக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டுத்திட்டம் பின்னடைவது தொடர்பாக சிலாவத்தை ஊரக மேம்பாட்டுக் குழுவினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், கிராம அலுவலர், முல்லை மாவட்டத் திட்டமிடலுக்கும் - மேம்பாட்டுக்குமான பணிப்பாளர் யாழமுதன் ஆகியோர் போரூட் நிறுவனப் பிரதிநிதிகளுடன் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதேவேளை - உள்ளூர் சிறு வீதிகள், கடற்தொழிலாளர்களுக்கான சிறு உதவிகள் என்பவற்றை மட்டுமே தம்மால் மேற்கொள்ள முடியுமென போரூட் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு வேறு நிறுவனத்திடம் உதவி கோரவிருப்பதாக சிலாவத்தை மத்தி மக்களுக்கு - திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான பொறுப்பாளர் யாழமுதன் தெரிவித்தார். (கு)



வன்னேரிக்குளம் பிரதேசத்துக்குட்பட்ட மின்சாரம் வழங்கும் நோக்குடன் பிரதேச சபையால் வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கியைப் படத்தில் காணலாம். படம்:- கு.கிருஷ்ணா

# நூலகப் பயிற்சித்திட்டம் தொடர்பாக கிளிநொச்சியில் மூன்று நாள் பயிற்சி

கிளிநொச்சி—

வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் மூன்று நாள் நூலகப் பயிற்சித்திட்டத்தின் தொடக்க நாள் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி - கனகபுரம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்பப் பிரிவு இணைப்பாளர் லோ.ரேணுகா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக் கொடி ஆகியன ஏற்றிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து - கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர், கொழும்பு சிறுவர் பாதுகாப்பு நூலக செயற்பாட்டுப் பணிப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆலோசகரும், மொழிபெயர்ப்பாளருமான சுப்பிரமணியம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி, வடக்கு - கிழக்கு முன்பள்ளிகளின் கண்காணிப்பாளர் மோ.நிலா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சித்திட்டமானது மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்க முறைமையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு பயிற்சியளிக்கப்பட்டு வருவதோடு, முதற்கட்டமாக 50 நூலகங்கள் அமைத்துப் பயிற்றுவிக்கப்பட்ட 30 பயனாளிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடனும் சிறுவர் பாதுகாப்பு நிறுவன நிதிப் பங்களிப்புடனும் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்தப் பயிற்சிகள் இன்றும் இடம்பெறவுள்ளது.

## நீர்விநியோகத் திட்டம் ஆரம்பம்

மன்னார்—

மன்னார் - அடம்பன் மாவட்ட வைத்தியசாலையில் யு.என்.எச்.சீ.ஆர். நிதியுதவியுடன் சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் 30 இலட்சம் ரூபா செலவில் நீர் விநியோகத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கான சகல ஆரம்பப் பணிகளும் நிறைவடைந்துவிட்டன. இதனால் நீண்டகாலமாக இந்த வைத்தியசாலையில் நிலவிவந்த நீர்த் தட்டுப்பாடு நீங்கும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (201)

# பண்டிவிரிச்சான் பிரதேசத்தில் கட்டுமானப் பயிற்சி ஆரம்பம்

மன்னார்—

மன்னார் - மடுக்கோட்ட பண்டிவிரிச்சான் பிரதேசத்தில் மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் நேற்று முன்தினம் காலை பயிற்சி ஆசிரியர் சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மடுக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். இந்தப் பயிற்சியில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை - நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் பண்டிவிரிச்சான் பாடசாலையில் பெண்களுக்கான கட்டுமானப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை போராளி கலையருவி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசிய கொடியை மடுக்கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ்மகள் ஏற்றிவைத்தார். இந்தப் பயிற்சியில் 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். (கு)

# சுயதொழில் ஊக்குவிப்பு பணம் வழங்கல்

மன்னார்—

சமூக மதிப்பீடு நிறுவனத்தால் மனித நேய அமைப்புகளின் நிதியுதவியுடன் விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புப் பணம் வழங்கும் நிகழ்வு மன்னார் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மன்னார் நகர பிரதேச செயலர் ஸ்ரனிஸ்மெல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- சமாதானமும், அபிவிருத்தியும் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தலா 10 விதவைகளுக்கு 7ஆயிரம் ரூபா வீதம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - மன்னார் சமூக மதிப்பீடு நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.எம்மோ, திட்ட அதிகாரி அருள்சோதி ஆகியோர் கலந்துகொண்டு உதவிகளை வழங்கி வந்தனர். (201)

# முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள்

கிளிநொச்சி—

முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வு கிளிநொச்சி - புன்னை நீராவி கலைமகள் முன்பள்ளியில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு - கரைச்சி வடக்கு அபிவிருத்தி இணைப்பாளர் அமிர்தலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஊரக வளர்ச்சிப்பணியாளர் நா.கணபதிப்பிள்ளை, மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சாரதா தேவி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை விசுவமடுப்பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் மதிவதனன் ஏற்றி வைத்தார். கருத்துரைகளை கரைச்சி வடக்கு நிறுவன இணைப்பாளர் உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுதுணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய அமைப்புக்களால் இந்த விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.

# சின்னஞ் சிறு செய்திகள்

## 150 வீடுகள் அமைப்பு

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியின் கீழ் நிகொட் நிறுவத்தால் 150 வீடுகள் கட்டுவதற்கான பயனாளிகள் தெரிவு செய்யும் பணி அண்மையில் நடைபெற்றது.

இதில் 100 வீடுகள் மீனவர்களுக்கும், 50 வீடுகள் கடந்த வன்செயல் காலத்தில் கணவனை இழந்த வறுமைக்கோட்டிலுள்ள விதவைகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது. இந்த திட்டத்தின் மூலம் வங்காலை, பேசாலை, பள்ளிக்குடா, தலைமன்னார் போன்ற கிராமங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (201)

## இறப்பு, பிறப்பு பதிவு நடமாடும் சேவை

வட்டக்கச்சி—

கரைச்சிப்பிரதேச செயலகத்துக்குட்பட்ட 42 கிராம அலுவலக பிரிவிலுள்ள மக்களுக்கான காலம் கடந்த பிறப்பு இறப்பு பதிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடமாடும் சேவை மூலம் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவை மூலம் 118 பிறப்பு பதிவுகளும், 39 இறப்பு பதிவுகளும் பதிவு செய்யப்பட்டன. (09)

## கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

மன்னார்—

மன்னார் - புதுக்கமம் பிரதேசத்தில் பொதுநல அமைப்புகள் கசிப்பு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்பவர்களை இனங்கண்டு கடும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

கடந்த காலத்தில் கசிப்பு அருந்தியமையால் பல குடும்பங்கள் சீரழிந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு, சண்டை சச்சரவுகள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

இந்தப் பகுதியிலுள்ள இளைஞர்கள் கசிப்பு உற்பத்தி செய்யுமிடத்தை இனங்கண்டு முற்றாக அழித்து வருகின்றனர். (201)

## வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு

வட்டக்கச்சி—

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தால் 2006 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டலும், மீட்டல் செயலமர்வும் நேற்று தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

பரந்தன் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த செயலமர்வில் பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு நடைபெறவுள்ளது.

2006 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் குறித்த திகதிகளில் இந்த செயலமர்வில் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (09)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - தேராவில் கிராம மக்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் ம.யோகையா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கிராமசேவையாளர் சுந்தரலிங்கம் கருத்துரைகளை நிகழ்த்தினார்.

சிறப்புரையை விசுவமடுப் பிரதேச சிறப்பு பொறுப்பாளர் நர்மதன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (கு)

## போதிய மருத்துவர்கள் இல்லை

கிளிநொச்சி—

கிளிநொச்சி அக்கராயன் பொது மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இன்மையால் நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த மருத்துவமனையில் நாளுக்கு நாள் நோயாளர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் ஒரு மருத்துவர் மட்டுமே கடமையிலுள்ளமையால் நீண்ட தூரங்களில் இருந்து சிகிச்சை பெறச் செல்லும்நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற வேண்டிய அவல நிலை காணப்படுகிறது. (கு)

## 67 பேர் போராட்டத்தில் இணைவு

கிளிநொச்சி—

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக இணையும் சமூக முன்னணிச் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் - நேற்று முன்தினம் பளை பிரதேசத்தில் ஏழு பெண்கள் உட்பட 67 பேர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

பளை மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் போராளி அமீர் தலைமையில் பிற்பகல் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கின் போதே இந்த அறுபத்தேழு பேரும் இணைந்துள்ளனர். (கு)

## பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு அலுவலகம் ஆரம்பம்

வடமராட்சிகிழக்கு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் செம்பியன்பற்று பிறப்பு, இறப்பு விவாகப் பதிவு அலுவலகம் அதன் செயற்பாடுகளை தற்போது ஆரம்பித்துள்ளது.

சுனாமியால் அழிந்துபோன இந்த அலுவலகச் செயற்பாடுகள் மருதங்கேணி பிரதேச செலயர் பணிமனையில் வாரம் ஒரு நாள் மட்டும் நடைபெற்று வந்தன.

செம்பியன்பற்றில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (கு)

## முடக்கனாறு புனரமைப்பு பணிகள் மிகவிரைவில் ஆரம்பம்!

பூநகரி—

பூநகரிப் பிரதேசத்திலுள்ள முடக்கனாறு புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் முடக்கனாற்றை புனரமைக்குமாறு அந்தப் பகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து புனரமைப்பு வேலைகளை மிகவிரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஆற்றைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பயனடைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் - திருக்குறள்.

## நமது நோக்கு

# எதிர்காலத்தையே பாதிக்கும்

நாட்டின் எதிர்கால சந்ததியின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக பரீட்சைத் திணைக்களம் இருந்துவருகிறது.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை என முக்கியமாக மூன்று பரீட்சைகளை பரீட்சைத் திணைக்களமே நடத்தி வருகின்றது.

இந்தவகையில், காலத்துக்குக்காலம் பரீட்சைத் திணைக்களம் வெளியிடும் பெறுபேறுகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு மாணவனினதும் எதிர்கால கல்வி தீர்மானிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாகப் பரீட்சைத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் விசனம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

உரிய காலத்தில் பரீட்சைகளை நடத்தாமல் விடுதல், உரிய வேளைகளில் பெறுபேறுகளை வெளியிடாமல் தாமதித்தல், பரீட்சை பெறுபேற்றில் குழப்பம் போன்ற சிக்கல்களை பரீட்சைத் திணைக்களம் உருவாக்குகிறது.

கடந்த ஏப்ரலில் நடைபெற்றிருக்கவேண்டிய உயர்தரப் பரீட்சை தாமதமாகியுள்ளது. இதற்குப் பரீட்சைத் திணைக்களம் கூறிய காரணம், உள்ளூராட்சித் தேர்தல் என்பது விநோதமானது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கும், மாணவருக்கும் என்ன தொடர்பு உள்ளது. சரி, அரச அலுவலர்கள் தேர்தல் கடமைக்குச் செல்வது கூட ஓரிரு நாட்களுக்குத்தான். பிறகேன் பரீட்சை ஒரு மாதம் ஒத்திப்போடப்பட்டது?

இப்படி அரசியல் காரணங்களுக்காகப் பரீட்சைகளை ஒத்திப்போடும் நடைமுறை வளர்ந்த நாடுகளில் இல்லையே. அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளில் எப்போது பரீட்சை நடைபெறும் என உத்தேச திகதியை முன்கூட்டியே அறிவித்துவிடும் நிலையில் உள்ளனரே என ஒரு ஆசிரியர் ஆதங்கப்பட்டது நியாயமானதே.

அதைவிட, உரியகாலத்தில் பெறுபேறு வெளியிடப்படாததால் கல்விச் செயற்பாடுகளிலும், நிர்வாகச் செயற்பாடுகளிலும் ஏகப்பட்ட குழப்பங்கள் நீடிக்கின்றன.

உரிய காலத்தில் பெறுபேறுகளை வெளியிடுவது தாமதிக்கப்படுவதால் - மாணவர்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதில் திண்டாடுகின்றனர். இந்த வாரம் வரும், அடுத்த வாரம் வரும் என்று எத்தனை தடவைகள் அவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளுக்காக ஏமாற்றமடையமுடியும்.

அதேவேளை, கடந்தவருடம் உயர்தர மாணவர்களின் விஞ்ஞானபாட விடைத்தாள் திருத்தும்போது இடம்பெற்ற முறைகேடு - பரீட்சைப் பெறுபேற்றின் மீதான நம்பிக்கையை மாணவர்கள் மத்தியில் இழக்கச்செய்துவிட்டது.

எதிர்காலத்தில் பொதுப் பரீட்சை மீதான நம்பிக்கையை இது பெரிதும் பாதிக்கச் செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

பரீட்சைத் திணைக்களத்தின் ஒரு சிறு தவறுகூட எத்தனையோ மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழடித்துவிடக்கூடும்.

எனவே, மாணவர்களின் கல்வி - பரீட்சை போன்ற விடயங்களில் அரசியல் தலையீடுகள், விருப்புவெறுப்புகளுக்கு அப்பாற்பட்டதொரு நிலை உருவாக்கப்படவேண்டும்.

பரீட்சைத் திணைக்களம் தனது நடவடிக்கைகளை உரிய காலத்தில், உரியவாறு செயற்படுத்த முயற்சிகளை எடுக்காவிடின் - அதன் தாக்கம் எதிர்கால சந்ததிகளின் மீதே உதைப்பை ஏற்படுத்தும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# இரண்டு வருடங்களிலேயே மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு இணைக்கமுடியும்!

## மானிய ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

கொழும்பு—

2005 க.பொ.த. உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகளுக்கமைய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை ஒருவருடத்தில் இணைத்துக் கொள்வதற்குப் பதிலாக இரண்டு வருடங்களிலேயே இணைத்துக்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

கடந்த வருட பரீட்சையின்போது இசற்புள்ளிகளை அடுத்தவாரத்தில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி பல்கலைகழக அனுமதிக்கு விண்ணப்பித்த 35 ஆயிரம் வரையான மாணவர்களில் 17 ஆயிரம் பேர்வரை பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

இதன்படி 2005 க.பொ.த. உயர்தர பரீட்சை முதல் பெறுபேறுக்கமைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைத்த மாணவர்களுக்கு மேலதிகமாக இரண்டாம் தடவை வெளியிடப்பட்ட பெறுபேறுக்கமைய மேலும் இரண்டாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

வருடமொன்றில் தெரிவுசெய்யப்படும் மாணவர் தொகையைவிட மிகப்பெரியளவில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைக்க வேண்டியேற்பட்டுள்ளதால், பல்கலைக்கழகங்களில் தற்போது நிலவும் வசதிகளுக்கேற்ப இரண்டு வருடங்களில் மாணவர்களை இணைத்துக்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரண்டாவது பெறுபேறுக்கமைய மருத்துவபீடத்துக்கு மட்டும் 195 பேர் அதிகமாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன், ரஜரட்டைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடத் தை ஆரம்பித்து அங்கு 40 மாணவர்களை சேர்ப்பதற்கும் மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மேலதிகமாக 40 மாணவர்களை அனுமதிப்பதற்கும், ஒரு வருடத்தில் 20 மாணவர்கள் என்ற விகிதத்திலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழக மருத்துவபீடங்களுக்கு 30 மாணவர்கள் என்ற ரீதியிலும் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# தாக்குதல் நடத்துவோரை பிடிக்க விசேட புலனாய்வுப் பிரிவினராம்

கொழும்பு—

படையினரின் வாகனங்களை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல்களை நடத்தும் விடுதலைப்புலிகளை சுற்றிவளைத்து பிடிப்பதற்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையின்(எஸ்.ரி.எவ்) 20 புலனாய்வு பிரிவினர் கிழக்கு மாகாணத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிளைமோர்களை பொருத்துவதற்கு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பல விடுதலைப்புலிகளை இந்தப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே தெரிவித்தார்.

அத்துடன், கிளைமோர்களைப் பொருத்துவதற்கு வரும் விடுதலைப்புலிகளை கைது செய்யவும், கிளைமோர்களை கைப்பற்றவும் கிழக்கு மாகாணத்தில் வாகனங்கள் உட்பட ஏனைய சோதனை நடவடிக்கைகள் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால்10 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் கடந்த இரண்டு வாரங்களில் சோதனையிடப்பட்டன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் திடீர் சோதனை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# கணினிக் கல்வியை கற்பிக்க பல்வேறு செயற்திட்டங்கள்

திருகோணமலை—

வட கிழக்கிலுள்ள மாகாண பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கணினி அறிவை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம் தெரிவித்தார்.

மாகாணத்தின் 24 கல்வி வலயங்களிலும் 148 உயர்தர பாடசாலைகளில் கணினி கற்கை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் 293 பாடசாலைகளில் பார்த்தல், கேட்டல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக 23 கணினி நிலையங்கள் இதுவரை அமைக் கப்பட்டுள்ளதுடன், 50 பிராந்திய தகவல் தொழில்நுட்ப நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்தக் கணினிக் கல்வி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பொதுச் சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம்

கொழும்பு—

பொதுச் சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களுக்கும் திறைசேரி செயலாளர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், தற்காலிக அல்லது நிரந்தர பணியாளர் நியமனங்கள் இடைநிறுத்தம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக அவசியமான பணி உயர்வு அல்லது ஆட்சேர்ப்பில் விதிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக வங்கி நிதியுதவியின்கீழ் வழுக்கையாறு புனரமைப்பு!

சுதுமலை—

உலக வங்கியின் உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழுக்கையாறு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் புனரமைப்புத் திட்டம் தொடர்பாக சூழல், சுற்றாடல் பிரச்சினைகள் காணப்படுமாயின் அதனைத் தமக்குத் தெரியப்படுத்துமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

விரைவில் இந்தப் புனரமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே, இதுதொடர்பாக பொதுமக்களுக்கு ஏதாவது சூழல், சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுமாயின் உடனடியாக மேற்படி செயலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (44)

# அரச அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு வாய்ப்பான காரைநகர் இளைஞர் மன்றம்!

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் மற்றும் பல்கலைக்கழக பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள் இன்று எதிர்நோக்கும் சவால்கள் எண்ணிறைந்தவை. இந்த வகையில் பட்டப்படிப்புகளே அல்லது பட்டப்பின் படிப்புகளோ பொதுவாக ஏட்டுக் கல்வி என்ற பாரம்பரிய பின்னணியைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன.

இந்த ஏட்டுக் கல்விப் பாரம்பரியம் இன்றைய நவீன உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் உள்ளது. இந்த ஏட்டுக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு தொழில் துறைசார் பயிற்சிநெறிகளைப் பெறவேண்டியது இன்றைய சூழலுக்கு மிகவும் வேண்டிய ஒன்றாகும்.

குறிப்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதன் பின் அவர்களது வினைத்திறமை அதிகரிக்கின்றது. வைத்திய மாணவர்கள் பயிற்சி பெற்ற பின்னர் வைத்தியர்கள் ஆகின்றனர். இவ்வாறு பயிற்சி பெற்ற பின்னர்



வினைத்திறமை அதிகரிப்பது அவதானிக்கக் கூடிய ஒரு விடயம் ஆகும். ஒவ்வொரு துறை சார்ந்த பயிற்சி நிலையங்களும் பெரும்பாலும் அந்த மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ளன. இந்த வகையில் அரச நிர்வாக துறைசார்ந்த அலுவர்களுக்கும் யாழ்.மாவட்டத்தில் ஓர் பயிற்சி நிலையம் மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

இன்று அரச நிர்வாக அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவுள்ளன. அந்த வகையில் நிர்வாக சிக்கல்கள், முகாமைத்துவ சிக்கல்கள், தேவைகளை கண்டறிவதிலுள்ள இடர்பாடுகள், அலுவலக நடைமுறைகள் என பலவற்றை குறிப்பிட முடியும். இன்று உலகளாவிய ரீதியில் சனத்தொகையின் அதிகரிப்பு வேகமானதாகவே உள்ளது. அதேவேளை, வளக்கிடைப்பனவு குறைவாக உள்ளது. இவற்றை பொருத்தமான நுட்பங்களுடாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. இதற்குக் காரணம் அந்த நாடுகளிலுள்ள வினைத்திறமை மிக்க முகாமைத்துவ ஊழியர்கள் என்றே குறிப்பிட முடியும்.

அதேவேளை, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இன்று திட்டங்கள் தோல்விப் போக்கை காட்டி நிற்பது அறியக்கூடியதாக உள்ளது. இதற்கான அடிப்படைக் காரணம் வினைத்திறமை குறைந்த முகாமைத்துவ செயற்பாடுகளே என்றும் கூறலாம். காலத்துக்கு ஏற்றதும், தேவைக்கு ஏற்றதுமான பொருத்தமான பயிற்சிநெறி வழங்கப்படுமானால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தமது அபிவிருத்திப் போக்கில் வேகநடையை ஏற்படுத்த முடியும்.

இந்த வகையில் இலங்கையை அவதானிக்கின்ற போது பல்வேறுபட்ட காரணங்களால் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கைத்தீவின் வட பகுதியும், தென்பகுதியும் பிரிக்கப்பட்டது போன்ற நிலை, பயணத்தடைகள், அதிகரித்த செலவீனம் போன்ற பல விடயங்களால் சிக்கல் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்களும் குறைக்கப்பட்டன. இன்றும் கூட இவ்வாறான சூழ்நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு சுட்டிக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பு காணப்படாத நிலையில் ஒரு பயிற்சி பெறுவதற்கு அரச ஊழியர் கொழும்பு சென்றுவர வேண்டுமானால், தனது மாதாந்த ஊதியத்திலிருந்து 10 -15 வீதத்தை சராசரியாகச் செலவு செய்யவேண்டிய நிலை உள்ளது. இதனால் பயிற்சிக்குச் செல்லும் சந்தர்ப்பம் தடைப்படும் சூழல் உருவாகின்றது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இந்தப் பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்கும் போது, யாழ்.மாவட்டம் சார்ந்த அரச ஊழியர் மட்டுமல்ல - முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற அயல் மாவட்டத்தினரும் பயன்பெற வாய்ப்பாக இருக்கும்.

இதேவேளை - கடந்த இரண்டு தசாப்தங்களாக நடந்து முடிந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி என்பன அதிகளவில் பாதிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே. இந்த மாவட்டங்களில் இன்று துரிதகதியில் புனருத்தாரண அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இன்றும் ஏறத்தாழ 10 -15 வருடங்கள் இந்த வேலைத்திட்டங்கள் நடைபெறலாம். இவ்வாறு நடைபெற்றால் புதியதோர் அபிவிருத்தி வியூகம் இந்தப் பகுதிகளில் தெரியும் என திட்டமிடலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த வகையில் அபிவிருத்தி முயற்சியில் அரச நிர்வாக ஊழியர்களின் பங்களிப்பு மிக கணிசமானதாக உள்ளது. இந்த அரச நிர்வாக ஊழியர்கள் மேலும் பல துறைசார் பயிற்சி நெறிகளைப் பெறுவார்களானால் அந்த வேலைத்திட்டம் வினைத்திறமை மிக்கதாக மாறும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. எனவே, இந்த வகையில் அவதானிக்கும் போது அரச நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்று வடபகுதிக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு அவசியம் என்பது தெளிவாகின்றது.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கான சகல வள வாய்ப்புகளும் காணப்படுகின்றன. குறிப்பாக காரைநகரில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்றம் இதற்கு வாய்ப்பாக காணமுடிகின்றது. இங்கு அரச அலுவலர்களுக்கான ஓர் பயிற்சி நிலையத்தை அமைப்பதில் பல்வேறு காரணிகள் சாதகமான தன்மையைக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் -

1. பௌதீக வளப்பொருத்தப்பாடு.
2. போக்குவரத்து இலகுத்தன்மை.
3. உல்லாசப் பயணத்துறை விருத்தி.
4. சுற்றாடல் பொருத்தத்தன்மை.
5. புதிய அபிவிருத்தி.
6. மனிதவளத்தின் போதுமான தன்மை.

போன்ற பல விடயங்களைக் குறிப்பிட முடியும்.

பௌதீக வள பொருத்தப்பாட்டைப் பொறுத்த வரையில் காரைநகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இளைஞர் சேவைகள் மன்ற கட்டடத் தொகுதி வாய்பாக அமைந்துள்ளது. பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதி முழுமையான பயன்பாடு அற்ற நிலையில் இன்று காணப்படுகின்றது. இந்தக் கட்டடத் தொகுதி மிகமிகப் பொருத்தமான ஓர் இடமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக அங்கு அமைக்கப்பட்டுள்ள கலை அரங்கம் ஒரு தடவையில் 300 பார்வையாளர்கள் இருக்கக் கூடிய வசதி கொண்டது. ஏறத்தாழ 325 சதுரமீற்றர் பரப்பைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. இதேபோன்று 250 பேர் ஒரே தடவையில் உணவு உண்ணக்கூடிய உணவு மண்டபம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இது 360 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும்.

இவ்வாறே சமையல் அறையைப் பொறுத்த வரை போதுமான வசதி கொண்டதாகவும் அதனுடன் இணைந்த வகையில் கணிசமான பொருட்களைச் சேமித்து வைக்கக் கூடிய களஞ்சிய அறையும் அமையப்பெற்றுள்ளது. இவ்வாறே 5 விரிவுரை மண்டபங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் தலா 50 மாணவர்கள் கொள்ளக் கூடியதாக 70 சதுரமீற்றர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கணினி ஆய்வு கூடம் 50 மாணவர்கள் ஒரே நேரத்தில் பயன்படுத்தக் கூடிய 50 கணனிகள் இங்கு பொருத்தப்பட்டுள்ளன. இது ஏறத்தாழ 72 சதுரமீற்றர் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே ஆண்கள் உடுப்பு மாற்றறை (200 பேருக்கானது) பெண்கள் உடுப்பு மாற்றறை (100 பேருக்கானது) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏறத்தாழ 36 விரிவுரையாளர்கள் தங்கக் கூடிய விசாலமான வசதிகள் கொண்ட தனித்தனி அறைகள், மாணவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்களுக்கான தனித்தனியான போதுமான மலசல கூட வசதிகள் மற்றும் குளியல் வசதிகள், நிர்வாக அலுவல்களை மேற்கொள்ளுவதற்கு வசதியான 72 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட ஓர் நிர்வாக அலுவலகம் என்பன இங்கு போதுமான பௌதீக வசதிகளாகக் காணப்படுகின்றது. குறிப்பாக 19 கட்டடத் தொகுதிகள் மிகப் பொருத்தப்பாடாக இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத் தொகுதிகள் அரச உத்தியோகத்தர்களுக்கான ஒரு பயிற்சி நிலையமாக அமைப்பதற்கு மிகப் பொருத்தமானதும், அவசியமானதும் [illegible] எனக் குறிப்பிடமுடியும்.

அடுத்து போக்குவரத்தினுடைய இலகுத்தன்மையை அவதானிக்கின்றபோது - யாழ். நகரப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 20 கிலோமீற்றர் தொலைவில் காரைநகர் அமைந்துள்ளது. போக்குவரத்து யாழ்.நகரப்பகுதியுடன் நெரிசல் அற்றவிதத்தில் அமைந்துள்ளது. யாழ். நகர்ப்பகுதியில் இருந்து கல்லுண்டாய் வீதியூடாக பொன்[illegible]லைச் சந்தி வரை நெரிசல் அற்ற ஒரு பாதையாகவே அமைந்துள்ளது. இதனால் போக்குவரத்து அதிகரிக்குமானால் இந்தப் பகுதியும் வளர்ச்சி அடையக் கூடிய சூழல் உருவாகும்.

இதேவேளை - வடமராட்சி, தென்மராட்சி பகுதியினரும் மிக இலவாக இந்தப் பகுதியை சென்றடையக் கூடிய வகையில் போக்குவரத்து வலைப்பின்னல் அமைந்துள்ளது. இதேவேளை இலங்கைப் போக்குவரத்து சபைக்குரிய பேரூந்து தரிப்பிட நிலையம் காரைநகரில் அமைந்துள்ளமை மேலும் ஒரு சிறப்பான விடயமாகவே காணப்படுகின்றது. இவ்வாறான நிலை மாத்திரமின்றி வலந்தலைச் சந்திவரை தனியார் பேரூந்து சேவை காணப்படுவது இதன் மற்றொரு வாய்ப்பான செயற்பாடாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக குறிப்பிட்ட இடத்துக்கான போக்குவரத்து மிக இலகு தன்மை கொண்டுள்ளது எனக் குறிப்பிட முடியும்.

மேலும், யாழ்.மாவட்டத்தில் குறிப்பிடக் கூடிய அழகிய கடற்கரை கசூரினா கடற்கரையாகும். இந்தக் கடற்கரையைத் தேடி மக்கள் கூட்டம் இன்று படை எடுக்கின்றது. இவ்வாறான அரச அலுவலர்களுக்கான பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்படும் போது மேலும் இந்தக் கடற்கரை மெருகுபடும் வாய்ப்பு உள்ளது. இதேவேளையில் இயற்கைச் சூழல் அமைப்பு மிகப் பொருத்தமான இடத்தில் இந்தக் கட்டடத் தொகுதிகள் அமைவு பெற்றிருப்பது சூழல் பாதிப்புக்களில் இருந்து விலக்கப்பட்டுள்ளதை காட்டி நிற்கின்றது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்தப் பயிற்சி நெறியைப் பெறவேண்டிய அரச ஊழியர்கள் அதிகமானோர் காணப்படுகின்றனர். இதேவேளை, பட்டதாரிகள் நியமனத்திலும் அதிகமானோர் புதிதாக நிர்வாகம் சார்ந்த துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டதால் இங்கு ஆரம்பிக்கப்படும் பயிற்சிகளுக்கு கணிசமான கேள்வி ஏற்பட வாய்ப்பு உண்டு. இதேவேளை இந்தத் துறைசார் நிபுணத்துவ மனிதவளம் யாழ்.மாவட்டத்திலேயே காணப்படுகின்றமை மேலும் யாழ்.மாவட்டத்தில் இந்தப் பயிற்சி நிலையம் அமைவதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இவ்வாறான பயிற்சி நிலையம் அமைகின்றபோது அதன் அயல்புற அபிவிருத்தி மேம்பாடு அடையும் அதேவேளை மனித வளமும் வினைத்திறன் மிக்கதாக மாற்றம் பெறக் கூடிய நிலை ஏற்படும். இவ்வாறான ஒரு பயிற்சி நிலையம் அமைவு பெறுகின்றபோது, இதனுடன் ஒருங்கிணைந்த வகையில் தீவக அபிவிருத்தியும் மேம்படுத்தப்படும் இதேவேளை இந்தப்பகுதி வாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு பெறக்கூடிய நிலையும் இங்கு தோற்றம் பெறும். குறிப்பிடப்பட்ட கட்டடம் போன்ற அமைப்பு இந்தத் திட்டம் (பயிற்சி) வெற்றி பெறுவதற்கு மிகப் பொருத்தமான வளமாகவே காணப்படுகின்றது.

## விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## கும்பம்



**அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி, 1,2,3 கால்கள்**

சந்திரராசி கும்பமாக அமையப்பெற்ற அன்பர்களுக்கு இராசிநாதன் சனி 6ஆம் வீட்டிலும், தனாதிபதியான குரு பகவான் 9ஆம் வீட்டிலும் சஞ்சரிப்பது சிறப்பான அம்சமாகும். தொழில் பொருளாதார ரீதியில் நினைத்தவையெல்லாம் நிறைவேறும். சிலருக்குத் திருமணம் போன்ற சுபகருமங்கள் நிறைவு பெறும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கடந்த காலங்களில் கடன்கள் இருந்தால் அவையெல்லாம் நேர் செய்து விடலாம். தேகசுகம் சிறப்பாக இருக்கும். குடும்ப நிலையும், மனைவி, மக்களும் சுபிட்சமாக இருப்பார்கள்.

தொடங்கும் கருமங்கள் வெற்றியாகவே முடியும். உற்றார், உறவினர், நண்பர்களால் உதவிகள் உண்டு. வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி, பணம் என்பன வந்து சேரும். புதிய தெம்புடன் அன்றாடப் பணிகளை ஆற்ற முடியும். வீடும், வாகனமும், வசதிகளும் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெற்று குதூகலமாக இருக்கும். சிலருக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கும். அநேகமாக மருத்துவச் செலவுகள் வெகுவாகக் குறையும். மனதில் பூரிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

28.10.2006இல் குரு பகவான் 10 ஆம் வீட்டுக்கு வருவதால், அதன் மேல் நற்பலன்கள் குறையும். தொழில் பொருளாதார நிலைகளிலும், சாதகமற்ற தன்மை உண்டாகும். எல்லா விஷயங்களிலும் நிதானமாகச் செயற்பட வேண்டியிருக்கும். தேசசுகம், குடும்பசுகம் சற்றுப் பாதிப்படையக்கூடும். வைத்தியச் செலவுகளும் ஏற்பட இடமுண்டு. குடும்பத்தில் கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமை தோன்றும். புத்திரர்களாலும் உதவி குறையும். சிக்கனச் செலவுகளால் பொருளாதாரத்தைச் சேமிக்க முடியும். வியாழக்கிழமையில் குரு பகவானை மஞ்சள் பூவினால் அர்ச்சித்து வழிபாடு செய்தல் நன்று.

உத்தியோகத்தர்களுக்கு வருடாரம்பம் சிறப்பாக அமைகிறது. மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்க இடமுண்டு. மதிப்பும், கௌரவமும் உண்டாகும். பிரயாண வசதிகள் நன்றாக இருக்கும். கௌரவமான பதவியை வகிக்க முடியும். புதிதாக உத்தியோகத்துக்கு விண்ணப்பித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும். நிரந்தரமற்றவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். வருட பிற்பாதியில் நற்பலன்கள் குறைந்து காணப்படும். அதிகாரிகளை அனுசரித்துப் போவது நன்று.

வர்த்தகர்களுக்கு வருட முற்பகுதியில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளைச் செய்து தொழிலைப் பெருப்பிக்க முடியும். வியாபாரத்தில் பிரமாதமான வளர்ச்சியும், அபிவிருத்தியும், லாபமும் ஏற்படும். கூட்டுத் தொழில் செய்வோர் நிதானமாகச் செயற்படுதல் நன்று. நகைவியாபாரம், மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வோர் அதிக லாபம் பெறுவர். வங்கி உதவிகளும் கிட்டும். தொழில் சம்பந்தமான பிரயாணங்களும் நல்ல பலனைக் கொடுக்கும். வருடப் பிற்பகுதியில் தொழிலில் போட்டி, பொறாமை என்பன ஏற்படும். சற்று நிதானமாகச் செயற்படுதல் நன்று.

பெண்களுக்கு மனதில் சிறப்பான உற்சாகமும், சுபிட்சமான உடல் நிலையும் காணப்படும். எடுத்த கருமங்களை சிறப்பாகச் செய்து முடிக்க முடியும். கணவன், மனைவி அந்நியோன்னியம் சிறக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டு. திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் கைகூடி சந்தோஷம் உண்டாகும். வீடு, ஆடை, ஆபரணம் சேரும். புத்திரபாக்கியம் உண்டாகி மகிழ்ச்சியைத் தரும். ஐப்பசி மாதத்தின் மேல் தேகசுகம் கவனிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வருடத் தொடக்கம் உற்சாகமாக அமையும். கல்வித்துறையில் சிறப்பான முன்னேற்றம் உண்டு. விளையாட்டுக்களிலும் சாதனை படைக்க முடியும். பரிசுகள் பெற வாய்ப்புண்டு. உயர்கல்வி கற்கவும், வாய்ப்புகள் உண்டு. பாராட்டுக்களும் கிட்டும். வருட இறுதியில் கல்வியில் ஊக்கம் தேவை.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

# தி.மு.கவில் அவமானப்படுத்தினார்கள்; பிரசாரக் கூட்டத்தில் சரத்குமார் தெரிவிப்பு



சென்னை —

தி.மு.கவில் என்னை அவமானப் படுத்தினார்கள் என்று நடிகர் சரத் குமார் தண்டையார் பேட்டையில் நடந்த அ.தி.மு.க தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஒரு சரியான மாலுமி இல்லாமல் திகைத்துக் கொண்டு இருந்தேன். நான் புரட்சித்தலைவியை சென்று பார்த்தவுடனேயே என்னை அரவ ணைத்து, ஏற்கனவே நீங்கள் இங்கு இருக்க வேண்டியவர்கள்தானே எங்கோ போய் திக்குத் தெரியாத காட்டைச் சுற்றி வந்திருக்கிறீர்களே என்று கேட்டார்.

என்னையும் உங்கள் சித்தி, உங் கள் அண்ணாமலை, உங்கள் செல்வி, உங்கள் ராதிகாவையும் அரவணைத்து வெல்லுங்கள் - வெற்றிக்கனியை பறித்து வாருங்கள் என்று ஆணை யிட்டுள்ளார். தி.மு.க இன்று தயாநிதி மாறன் முன்னேற்றக் கழகமாக மாறி உள்ளது. பின்பு உதயநிதி முன்னேற் றக் கழகமாக மாறிவிடும்.

எனக்கு என்ன அவமானம் ஏற் பட்டது என்பதை உங்களிடம் சொல் கிறேன். எனக்கு தி.மு.கவில் மேல் சபை பதவி கொடுக்கப்பட்டது. எதற் காக கொடுக்கப்பட்டது. நான் சேர்ந்த சமுதாயம், அந்த சமுதாயத்துக்கு ஏதா வது செய்யவேண்டும் என்று நாடாளு மன்றத்துக்கு அனுப்புகிறார்கள்.

ஆனால், அந்த சமுதாயத்தின் கோரிக்கையை நிறைவேற்றாமல், மெர்க்கண்டைல் வங்கியின் பிரச் சினை வந்தபோது அதற்காக என்னை அழைத்துச் சென்று பேசும்போது, அந்த பேச்சுவார்த்தை சரிவர நடை பெறவில்லை. அன்று சமுதாயம் அவ

இன்னொரு கொமெடியான விஷ யத்தை நீங்களும் கேளுங்கள். தி.மு.க மாநாட்டில் முதல் வரிசையில் உட் கார்ந்து இருக்கிறேன். பேராசிரியர் அன்பழகன், சரத்குமார் பின்வரி சைக்கு சென்று விடுகிறீர்களா என்று கேட்டார்.

எதற்கு சார் என்னை பின்னால் போக சொல்லுகிறீர்கள் என்று கேட் டேன். அதற்கு அவர் பா.ம.க தலை வர் பேசிக்கொண்டு இருக்கிறார் என்று கூறினார். பா.ம.க தலைவர் பேசுவ தற்கும் நான் பின்னால் போவதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டேன். இல்லை, இல்லை போங்கள் சலசலப் பாக இருக்கிறது என்று கூறினார்.

தி.மு.க மேடையில் சலசலப்பு வரு கிறது என்று கூறி என்னை பின்வரி சைக்கு தள்ளியதால் நான் உடனே அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு வந்து விட்டேன். எப்படி சென்றீர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். நான் காரில் சென்றதாக கூறினேன். இல்லைங்க தலைவர் பேச்சுக்கு முன்பாக நீங்கள் எப்படி சென்றீர்கள் என்று கேட்டனர். என்னை அவமானப்படுத்தினார்கள் அதனால் நான் வந்து விட்டேன் என்று கூறினேன். நான் படித்தவன். பின்னால் செல்லுங்கள் என்றால், வீட்டுக்குச் செல்லுங்கள் என்றுதான் அர்த்தம்.

நான் என்ன தவறு செய்தேன், பணம் கேட்டேனா? 2 கோடி கொடுங் கள், பதவி கொடுங்கள் என்று கேட் டேனா? நான் கட்சியில் சேர்ந்தது மக் களுக்கு நல்லது செய்யவேண்டும் என்பதற்காகத்தான்.

ஆனால் அவரது கொள்கைகள் அனைத்தையும் குடும்ப அரசியல் நடத்துவதற்கு பயன்படுத்துகிறார். அவர்களுடைய குடும்பம்தான் அனைத்துத் தொழிலையும் செய்ய வேண்டும். வேறு யாரும் இந்தத் தொழிலை செய்யக்கூடாது என்று நினைக்கிறார்கள்.

தயாநிதி மாறனுக்கு தைரியம் இருந்தால் என்னை ஒரே மேடை யில் சந்தித்து பார்க்கட்டும், ஆங்கிலத் தில் பேசிப்பாருங்கள், கன்னடத்தில் பேசிப்பாருங்கள், தெலுங்கில் பேசிப் பாருங்கள், இந்தியில் பேசிப்பாருங் கள் எந்த விஷயத்தையும் பேசிப்பாருங் கள் நான் பேசத் தயாராக இருக்கி றேன்.

தயாநிதி மாறனுக்கு முதலமைச்ச ராக வேண்டும் என்று ஆசை. தளபதி ஸ்டாலினுக்கு முதலமைச்சர் ஆக வேண்டும் என்று ஆசை. இவர்க ளுக்கு மக்கள் மீது ஆசை இல்லை. அதை தெரிந்து கொண்ட நான் அந்த வேதனையில் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் அ.தி. மு.கவுக்கு வந்துள்ளேன்.

நான் தி.மு.கவுக்கு போனதே தவறு. எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனாக இருந்து விட்டு அங்கே போனது தப்பு. எம்.ஜி.ஆர் ரசிகனாக இருந்து ஏரா ளமான மேடைகளில் பேசியிருக்கி றேன்.

உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம், உயர்ந்தாலும், தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம் என்று புரட்சித் தலைவர் பாடியிருக்கிறார். என்னை அறியாமல் நான் அங்கு போய் சேர்ந்து விட்டேன்.

இப்போது நான் சரியான இடத் துக்கு, அதாவது தாய் இருக்கும் இடத் துக்கு வந்து விட்டேன். ஆகவே அ.தி. மு.க வேட்பாளர்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சரத்குமார் மேலும் தெரி வித்தார்.

# தமிழக மக்களுக்கு ஜெயலலிதா எதுவுமே செய்யவில்லை!

## எம்.கிருஷ்ணசாமி தெரிவிப்பு



புதுடெல்கி —

தமிழக மக்களுக்கு முதல்வர் ஜெயலலிதா எதுவும் செய்யவில்லை என்று தமிழக காங்கிரஸ் தலைவர் எம். கிருஷ்ணசாமி குற்றம்சாட்டினார்.

தமிழகத்துக்கு அடுத்த மாதம் 11 ஆம் திகதி நல்ல செய்தி கிடைக்கும். 234 தொகுதிகளிலும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெறுவார்கள் .

தி.மு.க தலைவர் கருணாநிதி செயற்படுத்திய நல்ல திட்டங்கள் அனைத்தையும் ஜெயலலிதா ரத்துச் செய்து விட்டார்.

தனக்குப் பிடிக்காதவர் மீது பொய் வழக்குப் போட்டுச் சிறைக்கு அனுப்பி பியுள்ளார். அனைத்துத் தொகுதிகளிலும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி பல மாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.




# தி.மு.க கூட்டணிக் கட்சிகளுக்கு சம்மட்டி அடி கொடுக்கவேண்டும்

## என்கிறார் திருமாவளவன்



காஞ்சிபுரம் —

தேர்தலில் தி.மு.க கூட்டணி கட்சிகளுக்கு சம் மட்டி அடி கொடுக்கவேண்டும் என்று திருமாவளவன் தெரிவித்தார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் பொதுச்செயலாளர் தொல். திருமாவள வன் பேசியதாவது -

தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான ஜனநா யக மக்கள் கூட்டணி 200 இடங்களில் வெற்றிபெறு வது உறுதியாகிவிட்டது. நாடு முழுவதும் மௌன மாக அலை வீசுகிறது.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சமுதாய மேம்பாட்டுக்காக பாடுபட்டுவரும் ஜெயலலிதா கொண்டுவந்த நலத்திட்டங்கள், சலுகைகள் யாவும் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றியுள்ளன. தி.மு.க தேர்தல் அறிக்கையில் வீடுகள் தோறும் கலர் தொலைக்காட்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. பாடசாலை மாணவியர்களின் கல்வி மேம்பாட்டுக்காக தந்த இலவச சைக்கிள் திட்டத்தையும், கருணாநிதி அறிவித்துள்ள கலர் தொலைக்காட்சி வழங்குவதையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

சாதி, சமயமற்ற, கலவரமற்ற தமிழகமாக இருக்கவேண்டுமானால் அ.தி. மு.க அரசு அமையவேண்டும். தமிழகத்தில் குடும்ப அரசியலைத் திணிக்கும் தி.மு.க கூட்டணி கட்சிகளுக்கு தமிழக மக்கள் சம்மட்டி அடி கொடுக்கவேண் டும். இவ்வாறு தொல். திருமாவளவன் பேசினார்.

# பிணையுடன்தான் வைகோ பிரசாரம் செய்கின்றாராம்!

## தயாநிதி மாறன் தெரிவிப்பு



புதுடெல்கி —

ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ மீது தமிழக அரசு தொடர்ந்த பொடா வழக்கு இன்னும் ரத்துச் செய்யப்பட வில்லை. அவர் இன்னும் பிணை யில்தான் பிரசாரம் செய்து வருகிறார் என மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதி மாறன் தெரிவித்தார்.

பெங்களூரில் நடைபெற்ற பிரசா ரக் கூட்டத்தின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் -

அ.தி.மு.க.வுடன் வைகோ கூட் டணி சேர்ந்துள்ளார். ஆனால் அவர் மீது தமிழக அரசு தொடர்ந்த பொடா வழக்கு இன்னும் ரத்தாகவில்லை. பிணையில்தான் அவர் பிரசாரம் செய்து வருகிறார்.

ஜெயலலிதாவுடன் கூட்டணி ஏற் படுத்திக்கொண்ட அவர் தன் மீது தொடர்ந்த பொடா வழக்கை தமிழக அரசு ஏன் ரத்துச் செய்யவில்லை என ஜெயலலிதாவைக் கேட்பாரா? 19 மாதங்கள் சிறையில் இருந்த அவ ருக்கு இது ஏன் தோன்றவில்லை.

கடந்த மக்களைவைத் தேர்தலில் வெற்றிபெற்ற தி.மு.க கூட்டணி மத் திய அரசின் பல்வேறு திட்டங்களைத் தமிழகத்துக்கு பெற்றுத் தந்தது. ஆனால், அதை நிறைவேற்ற ஜெய லலிதா தடையாக இருக்கிறார் என் றார் தயாநிதிமாறன்.

# கூட்டணி ஆட்சி ஏற்பட்டால் கருணாநிதி முதல்வராக ஆதரவு



## பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவிப்பு

கும்பகோணம் —

கூட்டணி ஆட்சி ஏற்பட்டால் கருணாநிதி முதல்வராக நிபந்தனை யற்ற ஆதரவளிப்போம் என்று டொக் டர் ராமதாஸ் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் கும்பகோணத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என தேர்தல் அறிக்கையில் கலைஞர் தெரிவித்துள்ளதை ஜெயலலிதாவும், வைகோவும் எப்படிச் சாத்தியம் எனக் கேட்டனர்.

ஆனால், தற்போது அவர் 10 கிலோ அரிசி இலவசம் எனக் கூறு கிறார். அதற்கு வைகோவும் ஆமாம் போடுகிறார். 30 ரூபாவுக்கு மிச்சமா கும் திட்டத்தை சாத்தியமில்லை என்று சொன்ன ஜெயலலிதா, 35 ரூபா மிச்ச மாகும் திட்டத்தை அறிவித்திருக்கி றார். 30 ரூபாவுக்கு மிச்சமாகும் திட் டம் சாத்தியம் இல்லாத போது 35 ரூபா மிச்சமாகும் திட்டம் மட்டும் எப் படி சாத்தியமாகும்?


முதல்வர் தேர்தல் நடத்தை விதிக ளுக்கு மாறாகத் தொடர்ந்து செயற் பட்டுவருகிறார். ஆனால், முதல்வர் ஜெயலலிதா அமைச்சரவைக் கூட்டத் தில் விவாதிக்காமல், அதிகாரிகளிடம் கலந்து பேசாமல் 10 கிலோ அரிசி இல வசம் என்று ஓர் அறிவிப்பைத் தேர் தல் பிரசாரத்தின்போது எங்கோ ஒரு சந்தில் நின்று அறிவித்திருக்கிறார். இது அப்பட்டமான தேர்தல் விதிமுறைகள் மீறல் ஆகும்.

தேர்தல் குறித்து பத்திரிகைகள் நடத்தியது விஞ்ஞான பூர்வமான கருத்துக் கணிப்பு இல்லை. 2 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்றால், அதில் 25 சதவீத மக்களிடமாவது கருத்துக்களைக் கேட்டுக் கணிப்புச் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நான் மட்டும் கடந்த 2 மாதமாக 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் எனக் கூறி வருகிறேன். எங்கள் தேர்தல் அறிக்கையில் கூட்டணி அரசில் சேர மாட்டோம் என எற்கனவே அறிவித் திருக்கிறோம். அப்படி ஒரு நிலை ஏற் பட்டால் கூட்டணி அரசில் கலைஞர் முதல்வர் ஆவதற்கு நிபந்தனையற்ற ஆதரவு தருவோம் என்று டொக்டர் ராமதாஸ் மேலும் தெரிவித்தார்.

# காங்கிரஸ், தி.மு.கவுக்கு 80 இல் நடந்ததே இந்த வருடம் நடக்கும் என்கிறார் வைகோ!

வேலூர் —



கடந்த 80 ஆம் ஆண்டில் தி.மு.க, காங்கிரஸ் கூட்டணிக்கு தமிழகத்தில் நடந்ததுதான் 2006 இல் நடக்கப் போகிறது என வைகோ தெரிவித்தார்.

ஆற்காடு தொகுதி பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ பேசியதா வது -

கடந்த இரண்டு ஆண்டுக ளுக்கு முன் மத்தியில் காங்கி ரஸ் தலைமையிலான ஆட்சி அமைய, தமிழக மக்கள் தி.மு.க கூட்டணிக்கு வெற்றி தந்தனர். அந்த வெற்றியே தொடரும் என்று தி.மு.கவினர் நினைத்துக் கொண்டிருக் கின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளாக தி.மு.க கடைப்பிடித்த அணுகுமுறைகள் மக்களுக்கு எதிராக இருந்ததால் - அதன் எதிரொலியாக காஞ்சிபுரத்திலும், கும்மிடிப்பூண்டியி லும் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க கூட்டணி படுதோல் வியடைந்தது.

கூட்டணி ஆட்சிக்கு தயாராக இருப்பதாக கருணாநிதி அறிவித்தார். இதே கருத்தை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளங்கோவன் சொன்னபோது கருணாநிதி கண்டித்தார். இது குறித்து சோனியா, மன்மோகன் சிங் ஆகியோர் கருணாநிதியிடம் தொலைபேசியில் மிரட்டினர்.

அத்துடன், படுதோல்வியடையப்போவதை உணர்ந்து கொண்டதன் காரணமாகவே கூட்டணி அமைச்சரவைக் கும் தயாராக இருக்கிறேன் என்று கருணாநிதி சொல் கிறார். கூட்டணி ஆட் சிக்கு நீங்கள் தயாராக இருக்கலாம். மக்கள் தயாராக இல்லை. தமிழக மக்கள் கூட்டணி அமைச்சரவையை ஏற்பதில்லை.

சர்க்காரியா வழக்கிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காங்கிரஸ் கட்சியோடு கருணாநிதி கூட்டு வைத்துக்கொண்டார். அப்போது தமிழக மக்கள் இந்திரா காந்தியை பிரதமராக்க வேண்டும் என்று விரும்பியதால், தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. இந்திரா காந்தி பிரதமரானதும் புதுடெல்கிக்குச் சென்று ஒரு வாரம் தங்கியிருந்து இந்திரா காந்தியை நிர்ப்பந்தப்படுத்தி எம்.ஜி.ஆர் ஆட்சி யைக் கலைத்தனர்.

கடந்த 80 ஆம் ஆண்டு தேர்தலில் நடந்த சம்பவம் தற்போது 2006 சட்டசபைத் தேர்தலிலும் நடக்கும். கூட்டணி ஆட்சி நடத்த முடியாது என்பது மட்டுமல்ல, கூட் டணி வைத்துக்கொண்டு சட்டசபையில் நுழையக்கூட முடியாத நிலை தி.மு.க கூட்டணிக்கு ஏற்படும். தேர்தலுக்கு பிறகு எதிர்க்கட்சியாகக் கூட நுழையமுடியாது.

அந்த வாய்ப்பு ம.தி.மு.க, விடுதலைச்சிறுத்தைக்கு மட்டும்தான் உண்டு. இதனால்தான் ஆத்திரத்தில் கருணா நிதி பல்வேறு பொய்களை அவிழ்த்து விடுகிறார் என வைகோ தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## அனலைதீவில் கடற்படையினர் தாக்குதல்!

யாழ்ப்பாணம்—

அனலைதீவில் கடற்படையினர் மக்களின் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுதொடர்பாக அந்தப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவில் நேற்றிரவு கடற்படையினர் திடீரென மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை கடுமையாக தாக்கினர்.

இந்தச் சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து - அவர் யாழ். மாவட்ட பொலிஸ் அதிகாரியிடமும், கூட்டுப்படைத் தளபதிக்கும் இந்த விடயம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டது.

அவர்கள் உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார். (சி)

## அனைத்துப் பாடசாலைகளும் நாளை ஆரம்பம்

கொழும்பு—

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் 2 ஆம் தவணைக்காக நாளை ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள பாடசாலைகள் இரண்டாம் தவணை இரண்டாம் கட்டமாக நடைபெறவிருக்கிறது. எதிர்வரும் மே மாதம் 22 திகதி தொடக்கம் ஜூன் மாதம் 16 ஆம் திகதிவரை க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறவிருப்பதால் சில பாடசாலைகளுக்கு அந்தக் காலப்பகுதியில் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அதன்படி, நாளை ஆரம்பமாகவுள்ள முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் மே மாதம் 19 ஆம் திகதியும், இரண்டாம்கட்ட கல்வி நடவடிக்கைகள் ஜூன் மாதம் 19 ஆம் தொடக்கம் மே மாதம் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் இரு...

இதில் இராணுவச் சிப்பாயான சரத் என்பவர் கொல்லப்பட்டதுடன் மற்றொரு சிப்பாய் சிறுகாயங்களுக்கு இலக்காகினார்.

கல்மடு இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமாலை 5.30 மணியளவில் வவுனியா - கல்மடுவில் இராணுவத்தினரின் யுனிகோர்ன் கவச வாகனம் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர். மேலும், ஆறு பேர் படுகாயமுற்றனர்.

தாண்டிக்குளம் முகாமிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கிடாச்சோலை என்ற இடத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

முதலாம் ஆண்டு நினைவுடன்...

அன்னை அணைப்பில்
09
01
1928



சிவனின் அணைப்பில்
23
04
2005

## 10 தற்கொலைப் படை அணியினர்

# படை அதிகாரிகளைக் கொல்ல மட்டக்களப்புக்குள் ஊடுருவல்!

## என்கிறது கொழும்பு பத்திரிகை

மட்டக்களப்பு—

முக்கிய இராணுவ அதிகாரிகள் மற்றும் கருணா குழு உறுப்பினர்களை இலக்குவைப்பதற்காக விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்த பத்துப்பேர் மட்டக்களப்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதென கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து இரு வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ள தற்கொலைதாரிகளில் சில பெண்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் தற்கொலைதாரிகளைப் பற்றிய தகவல்கள் வெளியானதையடுத்து, கடந்த வாரத்திலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே மட்டக்களப்பில் கடந்த வியாழக்கிழமை கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டவர் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை உறுப்பினரா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது அந்தச் சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரி தெரிவித்திருப்பதாக அந்தச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

இவர் வர்த்தக நிலையத்தில் நின்றுகொண்டிருந்தவேளை - மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்தார். வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (௦3,மோ)

## ஓட்டோ...

இறந்த இருவரின் மரண விசாரணைகளும் இன்று நடைபெற்று பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படுமென நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (து)

## காரைநகரில்...

அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 3 மணியளவில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார், உயிரிழந்தவரின் சடலம் ஊர்காவற்துறை நீதிவானின் உத்தரவுக்கமைய பிரேத பரிசோதனை, மரண விசாரணை நடத்தப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சவுதியில் பணியாற்றிவிட்டு இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாடு திரும்பிய இவர் காரைநகர் பிரதேச சபைக்கான தமிழரசுக்கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்...

அந்தப் பிரதேசத்தில் சமையல் தொழிலாளியாக பாக்கியராசா பணியாற்றி வந்துள்ளார்.

வேறு ஒரு பிரதேசத்தில் அவரைப் படுகொலை செய்து சடலத்தை பாரதிபுரத்தில் கொலை யாளிகள் வீசியிருக்கக் கூடுமென்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## குடும்பப் பெண்...

காவற்றிக்குடாப் பிரதேசம் சீனன்குடாவுக்கு வெள்ளை வானில் சென்ற ஆயுததாரிகள் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததில் நல்லம்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். திருமலையில் ஊரடங்குச் சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் படையினரின் தேடுதல்கள் தொடருமாம்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

அதிகரித்துவரும் கிளைமோர்க் குண்டுத் தாக்குதல்களிலிருந்து படையினரைக் காப்பாற்றுவதற் காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

படையினருக்கு எதிராக பல தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக 2 நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற கிளைமோர் குண்டு தாக்குதல்களில் எவரும் காயமடையவில்லை.

நேற்று முன்தினம் மேலும் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், பெருமளவிலான தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

கிளைமோர் குண்டுத்தாக்குதல்களிலிருந்து படைத்தரப்பினரை காக்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை குறித்து பாதுகாப்பு காரணங்களுக்காக வெளிப்படுத்தமுடியாது.

இது தவிர, கடந்த நான்கு நாட்களுக்குள் படையினரால் 17 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டன. இவை வெடிக்கவைக்கப்படவிருந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அதிகளவிலான தேடுதல்கள் மற்றும் சுற்றிவளைப்புகள் கடந்த 4 நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அவை தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது என அவர் மேலும்தெரிவித்தார்.

## தமிழ்ச்செல்வனைச்...

கடந்த 4 வருட போர்நிறுத்த காலத்தில் கிழக்குத் தளபதிகளின் பயணத்துக்கு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விமானப் படையின் ஹெலிகொப்டர் அல்லது விடுதலைப் புலிகளின் படகுகளைப் பயன்படுத்தியே பயண ஒழுங்கு இடம்பெற்றுவந்தது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்த நடைமுறைகளைக் காரணம் எதுவுமின்றி மறுத்து, கிழக்குத் தளபதிகளுக்குரிய பயண ஒழுங்குகளை இழுத்தடித்தது.

கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் தளபதிகளை அழைத்துவருவதற்கு தனியார் ஹெலி பயன்படுத்தப்படலாம் என்று அரசாங்கம் ஒரு யோசனையைத் தெரிவித்திருந்தது.

ஆனால், நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கும், கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் இது நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கொழும்பு திரும்பினார்.

இதன் பின்னர் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்னவைச் சந்தித்துப் பேசியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பணியாளர்கள் தேவை

## உயர்திரு Dr. பரமு கிருஸ்ணபிள்ளை

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி – மந்திகை ஆதார வைத்தியசாலை, தர்மகர்த்தா – புலோலி மூச்சம்புலம் சிவன் ஆலயம்)

அன்பின் திரு உருவாய்
வையகத்தில் வைத்தியராய்
பார் போற்றப் பணிபுரிந்த
சமூக ஜோதி.

ஆண்டொன்று ஆனாலும்
அழியாது உம் நினைவு.
நினைவழியா நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ பா. இலட்சுமண ஐயர் J.P
இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார்
ஆலய பரம்பரை பூசகர், பிரதம குரு,
தொண்டர் சபை, முத்தமிழ் அறிவாலயம்.

[C/5268]



MCS
324, Palaly Road, Jaffna.
**Microsoft Certified**
**Systems Engineer**

ஏப்ரல் 30வரை விசேட சலுகைகள்


Mr. Bill Gates

- ★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
- ★ **Microsoft** நிறுவன அதிபர் **Bill Gates** வழங்கும் சான்றிதழ்
- ★ **Network Manager, System Administrator** தொழில் வாய்ப்புக்கள்
- ★ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

*****Supported by UNDP/JRRP*****


குச் சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்துள்ளது.

இடது கண்ணிலும், நெற்றியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான கந்தசாமி திருகோணமலை மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்டார்.

## வெலிக்கந்த...

சென்றுகொண்டிருந்த படையினரின் டபிள்கப் வாகத்தின்மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பயணம் செய்த 8 ஆவது கெமுனு வோச் பற்றாலியனின் பிரதிக் கட்டளை அதிகாரியான மேஜர் பேர்சி ஜெகத் என்பவரே பலியானார்.

மேலும், 6 படையினர் படுகாயமடைந்ததுடன் காயமுற்ற படையினர் பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## படையினரும்...

விடுதலைப் புலிகளும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதேவேளை, அந்தப் பகுதியில் வயர்கள் சிலவும், வெற்றுத் தண்ணீர் போத்தல்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்தத் தாக்குதலை ஆழ ஊடுருவும் படையணியினரே மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில், மன்னாரிலிருந்து சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். (மோ)


## பணியாளர்கள் தேவை

1. வரவேற்பாளர் 2. கணக்காளர் 3. காசாளர்

* முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :

முகாமையாளர்,
மூர்த்தி கலர் லாப்,
62/16 ஸ்ரான்லி லிங் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5274)



## மரண அறிவித்தல்

### அருளம்பலம் செந்தில்நாதன்

காரைநகர் குமுளங்குழியைப் பிறப்பிடமாகக்கொண்ட அருளம்பலம் செந்தில்நாதன் 22.04.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் அருளம்பலம், காலஞ்சென்ற அருளம்பலம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி (ஆசிரியை ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செந்தில்நாயகி, செல்வநாயகி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், சுந்தரமூர்த்தி (கம்பளை), திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது சகோதரியின் இல்லமான இல 229, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையல் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல 229, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (சி-5282)

தகவல்:-
திரு. சி. திருநாவுக்கரசு (மைத்துனர்)



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.